www.tamilarangam.net

# தூண்டில்



RAYA
67 RUE DE COLOMBES
92600 ASNIERES SUR-SEINE . FRANCE


அம்மா, அப்பா,
அக்கா, அண்ணா
இறந்து,
கல்வி தொலைந்து,
கந்தகம் சுவாசித்து,
பங்கருக்குள் முடங்கி.....

வெளியே
புதுவருடம், பொங்கலாமே?

Tamilische zeitschrift des Südasien Büro Nr. 37

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net






கடைசி விநாடிவரை எல்லோரும் பயந்துகொண்டிருந்தபடியே வளைகுடாவில் யுத்தம் 16.01.91 புதன் நள்ளிரவில் ஆரம்பித்துவிட்டது. அமெரிக்கா, பிரிட்டன், சவூதி அரேபியா, குவைத் நாடுகளின் 2,500க்கும் மேற்பட்ட போர் விமானங்கள் ஒரே நேரத்தில் குவைத் மீதும் ஈராக் மீதும் தாக்குதலை நடத்தியுள்ளன. 4 மணித்தியாலங்களுக்கு மேலாகத் தாக்குதல் நடத்தப்பட்டு இவ்விமானங்கள் திரும்பிச் சென்ற சிறிது நேரத்தின் பின் அமெரிக்காவின் 2 பொம்பர் விமானங்கள் மீண்டும் வந்து ஈராக் தலைநகரான பக்தாத் மீது கடுமையான தாக்குதலை நடத்தியுள்ளன.

1990 ஓகஸ்ட் 2 ஆம் திகதி ஈராக்கிய துருப்புகள் குவைத்தை ஆக்கிரமித்தபின் குவைத்திலிருந்து ஈராக்வெளியேறவேண்டும் என்ற 'கோரிக்கையுடன்' அமெரிக்கா தனது துருப்புகளை சவூதிக்கு அனுப்பிவைத்தது.

இதன் பின்னர் பிரிட்டன் எகிப்து, சிரியா, பிரான்ஸ், பாகிஸ்தான், பங்களாதேஷ், மொரக்கோ, செனகல், நைஜீரியா, செக்கோசெலவாக்கியா, கொண்டுராஸ், ஆர்ஜன்ரீனா, இத்தாலி, பெல்ஜியம், கனடா, கொலண்ட், ஸ்பானியா, அவுஸ்திரேலியா, ரசியா, டென்மார்க், கிறீக், நோர்வே, போர்த்துக்கல், ஜேர்மெனி ஆகிய நாடுகளைச் சேர்ந்த துருப்புகள் அல்லது துருப்புகளுடன் சேர்ந்து போர்விமானங்கள், கவச வாகனங்கள், யுத்தக்கப்பல்களும் சவூதி அரேபியா, எகிப்து துருக்கி நாடுகளுக்கு அனுப்பப்பட்டன.

ஈராக் குவைத்தை ஆக்கிரமித்ததிலிருந்து ஈராக் மீது பொருளாதார, உணவு, மருத்துவ தடைகளை விதித்திருந்த ஐக்கிய நாடுகள் சபை பின்னர் ஜனவரி 15இற்குள் ஈராக் குவைத்திலிருந்து வாபஸ் பெறாவிட்டால் தாக்குதல் நடத்தவேண்டும் என்ற அமெரிக்காவின் கோரிக்கைக்கு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# வளைகுடாவில் யுத்தம்

அனுமதியளித்திருந்தது. இதன் படியே காலக்கெடு முடிவடைந்ததும் மத்திய கிழக்கில் நிலைகொண்டிருந்த போர் விமானங்கள் தாக்குதலை ஆரம்பித்தன.

குவைத் மீது ஈராக் ஏன் ஆக்கிரமிப்பை மேற்கொண்டது?

தமது எண்ணெய் வயல்களிலிருந்து குவைத் எண்ணெயைத் திருடுவதாகவும், மேற்கு நாடுகளின் வேண்டுகோளின்படி எண்ணெய் விலையை குவைத் அதிகரிக்காமலிருப்பது தனக்கு நஷ்டத்தை யுண்டாக்குகிறது என்றும் தனது ஆக்கிரமிப்புக்கு ஈராக் காரணம் சொல்கிறது. அதைவிட குவைத் முன்பு ஈராக்கின் ஒரு பகுதியே என்றும், காலனியாதிக்கத்தின்போது பிரிக்கப்பட்ட தமது நாட்டின் ஒரு பகுதியையே மீண்டும் தமது நாட்டுடன் சேர்த்துள்ளதாக இன்னொரு விளக்கமும் தருகிறது.

உண்மையில், ஈரானுடனான போரில் ஏற்பட்ட செலவுகளினால் உண்டாகியிருக்கும் பொருளாதார நெருக்கடிகள் மக்கள் கிளர்ச்சிகளைத் தோற்றுவிக்கலாமென்ற அச்சத்திலேயே குவைத் மீது படையெடுத்து அந் நாட்டு கஜானாக்களை கொள்ளையடித்த ஈராக் பணம் குவிக்கும் எண்ணெய் வயல்களையும் தனதாக்கியுள்ளது.

ஏன் ஏகாதிபத்திய, முதலாளித்துவ நாடுகள் ஈராக்கின் நடவடிக்கையை எதிர்க்கின்றன?

சிறிய நாடான குவைத் மீது ஈராக் ஆக்கிரமித்தது அநீதியானது. எனவே குவைத்தை ஈராக்கிடமிருந்து விடுவித்து அங்கு ஜனநாயகத்தை நிலைநாட்டவேண்டும் என்று கூறிக்கொண்டு அமெரிக்காவும், ஏனைய முதலாளித்துவ, ஏகாதிபத்திய நாடுகளும் படைகளையும், படைகலன்களையும் வளைகுடாவில் குவித்துக்கொண்டிருப்பதுடன் ஈராக் மீதான



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தமது இராணுவ நடவடிக்கைக்கு உலகெங்கும் ஆதரவு தேடி வருகின்றன.

இந்த நாடுகள் என்ன காரணங்களைக் கூறிக்கொண்டாலும், குவைத்தில் இருக்கும் தமது முதலீடுகளைக் காப்பாற்றிக்கொள்ளவும், தமது எண்ணெய் தேவை பூர்த்தியாக்கப்படுவது தடைப்படுவதைத் தடுக்கவும், தமது சுரண்டலுக்கான கடல் வழியைக் காப்பாற்றவும், தமது வளர்ப்பு நாடான இஸ்ரேலுக்கு இணையாக ஈராக் பலம் பெற்றுவருவதை தடுக்கவுமே வளைகுடாவுக்குள் தலையைப் புகுத்தியுள்ளன.

ஈராக்கின் வன்முறைகள்

ஏகாதிபத்திய எதிர்ப்பாளனாகத் தன்னைக் காட்டி, வெளிநாட்டுப் படைகளுக்கு எதிரான 'புனிதப் போரில்' அராபியர்கள் அனைவரும் ஒன்றுதிரளவேண்டும் என்று அறைகூவல் விடுக்கும் சதாமின் கறைகள் மறந்துவிடக் கூடியவையல்ல.

1982ஆம் ஆண்டு டுஜாயன் என்ற கிராமத்தில் தொடங்கிய அரசுக்கெதிரான கிளர்ச்சியை இராணுவத்தை ஏவி குசைன் அடக்கியதில் ஏராளமான மக்கள் கொல்லப்பட்டனர். அக்கிராமமே அழிக்கப்பட்டது.

1980இல் ஆரம்பிக்கப்பட்ட ஈரானுடனான போரில் கைதிகளாக்கப்பட்ட பல ஈரானியர்கள் ஈராக் சிறைகளில் குரூரமான முறையில் சித்திரவதைசெய்யப்பட்டுக் கொல்லப்பட்டனர். போரின்போது தன்னை தற்போது எதிர்க்கும் இதேநாடுகள் தந்த இரசாயன நச்சுவாயுவைப் பயன்படுத்தி ஈரானியர்களைக் கொன்றதுடன் தனது சொந்தப்படைகளுக்கும் பாதிப்பை குசைன் ஏற்படுத்தினர்.

1988இல் குர்டிஸ்தான் பிரதேசத்தில் நச்சுவாயுத் தாக்குதலை மேற்கொண்டு, நிராயுதபாணிகளான 5,000க்கும்மேற்பட்ட அப்பாவி குர்டிஸ் மக்கள் கொன்றொழிக்கப்பட்டனர்.

குவைத் மீதான ஆக்கிரமிப்பின்போது ஏராளமான குவைத்தியர்கள் கொல்லப்பட்டதுடன் குவைத்திலிருந்த வெளிநாட்டவர்களும் கொல்லப்பட்டும், பாலியல் வன்முறைக்குள் உள்ளாக்கப்பட்டார்கள்.

இந்தக் கொடூரங்களைச் செய்த குசேன்தான் இன்று பலஸ்தீன மக்களுக்காகக் குரல் கொடுப்பதாகவும், ஏகாதிபத்திய எதிர்ப்பாளனாகவும் தன்னை காட்டிக் கொள்கிறார்.

அமெரிக்காவின் ஆக்கிரமிப்பு அடாவடித்தனங்கள்

"எந்த ஒரு பெரியநாடும் மற்றொரு சிறிய நாட்டை ஆ



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

க்கிரமிப்பதையும், அச்சுறுத்துவ-தையும் நாங்கள் ஒரு போதும் அனுமதிக்கமுடியாது. இதுதான் அமெரிக்காவின் கொள்கை" என்று அமெரிக்க ஜனாதிபதி புஷ் தொடர்ந்து கத்திக் கொண்டிருந்தாலும் அமெரிக்காவின் 'கொள்-கை' என்ன என்பது பலருக்கும் தெரியும்!

வடகொரியா கொம்யூனிஸ்ட் ஆட்சியாளர்களை முறியடிப்பதற்காக அமெரிக்காவும், ஐ.நா.சபையின் அங்கத்தவ 15நாடுகளும் தமது இராணுவங்களை தென் கொரியாவுக்கு அனுப்பி 1950-1953வரையான கால பகுதியில் வடகொரியா மீது இராணுவத் தாக்குதலை மேற்கொண்டன. பல மக்களை பலி கொண்ட இத் தாக்குதலுக்கு அமெரிக்காவே தலைமை வகித்தது.

லெபனான் ஜனாதிபதி கமில சாமூனின் வேண்டுகோளை ஏற்று லெபனானுக்குள் பிரவேசித்த அமெரிக்கத் துருப்புகள் 1958-1983வரையான காலப் பகுதியில் அரச படைகளுடன் இணைந்து கெரில்லாக்களையும், மக்களையும் கொன்று குவித்தன.

1964-1975 வரையான காலப் பகுதிவரை வியட்நாமை ஆக்கிரமித்திருந்த அமெரிக்கப்படைகள் உலகின் மிகப் பெரிய மனிதப்படுகொலையை நடாத்தின. குண்டு வீச்சுகள், நச்சு வாயுக்கள் மூலம் மக்களும், நகரங்களும் அழிக்கப்பட்டன.

1965இல் டொமினிக்கா குடியரசில் ஏற்பட்ட உள்நாட்டு போரை அடக்க அந் நாட்டு ஜனாதிபதி ஜொன்சன் அமெரிக்க உதவியை நாடியிருந்தார். இந்த அழைப்புடன் உட்பிரவேசித்த அமெரிக்கப்படைகள் கெரில்லாக்களையும், மக்களையும் கொன்றொழித்தன.

1983இல் கிரனிடா மீது படையெடுத்த அமெரிக்கா அங்கும் தனது நாசவேலைகளை நடத்தியது.



www.tamilarangam.net

1986இல் அமெரிக்கப்-போர் விமானங்கள் லிபியாவுக்குள் ஊடுருவி குண்டு வீச்சுத்தாக்குதலை நடாத்தின. லிபிய அதிபர் கடாபியைக் கொல்வதே இத் தாக்குதலின் நோக்கமாயிருந்தது.

1989-1990 காலப்பகுதியில் பனமாவை ஆக்கிரமித்த அமெரிக்கப்படைகள் நகரங்களைக் குண்டு வீசித்தகர்த்தன. ஆயிரக்கணக்கான மக்களைப்படுகொலை செய்தன. தமக்கு விசுவாசமானவர்களிடம் அந் நாட்டின் அதிகாரத்தை ஒப்படைத்தன.

1990இல் போதைப் -பொருள் ஒழிப்பு என்ற பெயரில் கொலம்பியாவுக்குள் வந்திறங்கிய அமெரிக்கத் துருப்புகள் கடத்தல்காரர்கள் என்ற பெயரில் அப்பாவி மக்களையும் , கொலம்பிய அரசுக்கு எதிரான வர்களையும் கொன்று குவித்தன. கொலம்பியாவில் தொழிற்சா-லை நடாத்தி போதைப்பொருள் வியாபாரம் செய்வதில் அமெரிக்காவே முக்கிய பங்குவகிக்கின்றது என்ற தகவல்கள் இப்போது வெளியாகியுள்ளன.

நிகரகுவா தனது மேலாதிக்கத்தை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதற்காக பொருளாதாரத்தடை, சி.ஐ.ஏ. மூலம் சதி வேலைகள், கொன்ராஸ் கூலிப்படைகள் மூலம் நாசவேலைகள் என்பவற்றை அமெரிக்கா மேற்கொண்டது.

உலகமெங்கும் தனது மேலாதிக்கத்தை நிறுவியும், இதை ஏற்க மறுக்கும் அரசுகளை சதிகள் மூலமும், நேரடியான ஆக்கிரமிப்பு மூலமும் கவிழ்த்து தனது விசுவாசிகளை அரசாக்கியும் - வெறியாட்டம் போடும் அமெரிக்காதான் இப்போது "ஆக்கிரமிப்பு" பற்றிய தனது கொள்கை விளக்கத்தை வெளியிடுகிறது.

அமெரிக்காவைப் போலவே ஈராக்கின் ஆக்கிரமிப்பை கண்டித்து தற்போது வளைகுடாவில் துருப்புகளை வைத்திருக்கும் பிரிட்டன், பிரான்ஸ், கொலண்ட், ஜேர்மெனி.... போன்றநாடுகளும் "ஆக்கிரமிப்பு" பற்றிக் கதைப்பதற்கான எந்தத் தகுதியுமற்றவையே. இந்நாடுகளில்பல இன்னும் தங்கள் காலனியாட்சிகளை வாபஸ் பெற்றுக் கொள்ளவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

ஐக்கிய நாடுகள் சபையின் உண்மை முகம்

1950ஆம் ஆண்டிலிருந்து இன்றுவரை அமெரிக்கா மேற்கொண்டுவரும் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளுக்கும், மனித உரிமை மீறல்களுக்கும் எதிராக, இன்று ஈராக்கிற்கு எதிரான இராணுவத் தாக்குதல், பொருளாதார மருத்துவத்தடை போன்று எந்த நடவடிக்கைகளையும் ஐ.நா.ச எடுக்கவில்லை. மாறாக அமெரிக்காவுக்கு வாலாட்டிக் கொண்டிருந்தது. கொண்டிருக்கிறது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தென்னாபிரிக்காவில் வெள்ளைநிற ஆக்கிரமிப்பாளர்களால் நிராயுதபாணிகளான அப்பாவி கறுப்பின மக்கள் கொன்று குவிக்கப்படும்போதும், சியோனிஸ இஸ்ரேல் இராணுவத்தினால் நிராயுதபாணிகளான பலஸ்தீனமக்கள் கொல்லப்படுகின்றபோதும் இந்த ஐ.நா.சபை இப்போது எடுத்துள்ளதைப்போன்று எந்த நடவடிக்கைகளும் எடுக்கவில்லை.

இன்று எதிரியாகிப்போன ஈராக் 1988இல் குர்டிஸ் மக்களை விசவாயு மூலம் கொன்றபோதுகூட ஐ.நா.சபை கண்டுகொள்ளவில்லை.

இலங்கையில் இந்திய ஆக்கிரமிப்பு இராணுவம் மேற்கொண்ட அட்டூழியங்களைப் பற்றியோ, இலங்கை அரசு சிறுபான்மை இனங்கள் மீதும், தனது இனத்தின் மீதும் பிரயோகித்துவரும் பயங்கரவாதம் பற்றியோ ஐ.நா.சபை எந்த அக்கறையும் இருப்பதாகக் காட்டிக் கொள்ளவில்லை.

இன்று தனது எஜமானர்கள் 'பொங்கி எழுந்ததும்' அவர்களுக்கு 'சகல' அனுமதிகளையும் வழங்கியுள்ளது. பொருளாதார, மருத்துவத் தடைகள் மூலம் ஈராக்கில் குழந்தைகள், பிரசவத் தாய்மார்கள், நோயாளிகள் இறந்ததைப் பற்றியும், தற்போதைய இராணுவ நடவடிக்கைகள் மூலம் அப்பாவிமக்கள் ஏராளமாகப் பலியாவது பற்றியும் ஐ.நா.சபை எதுவும் கதைக்கவில்லை.

## சோரம்போன ரசியா

வழக்கமாக எங்காவது ஆக்கிரமிப்பு, ஆட்சிக் கவிழ்ப்பு, எல்லைச் சண்டை, உள்நாட்டுயுத்தங்கள் நடந்தால் ரசியா ஒரு பக்கமும், அமெரிக்கா மறு பக்கமும் நின்று தமது ஆதரவுச்சக்திகளைத் தூண்டி விட்டு, தமது ஆயுதங்களுக்கு வியாபாரச் சந்தை பிடிப்பதும், தமது விசுவாசிகளின் அதிகாரத்தை நிறுத்துவதும் நடைபெறும்.






தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஆனால் இப்போது ரசியாவின் நிலை தலைகீழாகியுள்ளது. நாட்டைச் சீரழித்த தலைமைகள் இப்போது ஏனைய ஏகாதிபத்திய, முதலாளித்துவ நாடுகளுடன் குலாவி வருகின்றன. தலைமைகளின் போக்கால் பசிக்கும் பஞ்சத்திற்கும் உள்ளாகிய மக்கள் இன்று ஏனைய நாடுகள் இடும் "பிச்சை"யைப் பெறவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

இதே நேரம் பிரிந்து போகப் போராடிய லித்தௌன் மக்களுக்கு "சுதந்திரம்கொடுத்துள்ளதாக"கூறிய கொர்ப்பச்சேவ் இன்று அந்த "சுதந்திரத்தை திரும்ப வாபஸ்"பெற்றுள்ளதாக அறிவித்திருப்பதுடன், தனது இராணுவத்தை ஏவி லித்தௌன் மக்களைப் படுகொலை செய்து வருகிறார். ஆயுதங்களற்ற அப்பாவி மக்களைக் கவச வாகனங்கள் மூலம் நசித்துக் கொன்றமை மனிதாபிமானிகளை பேரதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது.

எனவே இராணுவ அடக்குமுறைகளைத் தானே சொந்தமாகப் பிரயோகித்து வரும் கொர்ப்பச்சேவ் அமெரிக்காவினதும், ஏனைய நாடுகளினதும் ஈராக் மீதான தாக்குதலை நியாயப்படுத்தியிருப்பது ஒன்றும் வியப்புக்குரியதல்ல. அத்துடன் தனது படைகளையும் தயார்நிலையில் இருக்குமாறும் அறிவித்துள்ளார். ரசியாவின் யுத்தக் கப்பல் ஒன்று ஏற்கெனவே வளைகுடாவில் தரித்து நிற்கிறது.

## இஸ்ரேலின் சங்கடம்

வளைகுடாவில் ஏற்பட்டுள்ள போரில் இஸ்ரேலும் முக்கியபாத்திரத்தை வகிக்கிறது. தனது படைகளை குவைத்திலிருந்து விலக்கிக்கொள்ள வேண்டுமானால் பலஸ்தீனப் பிரதேசங்களிலிருந்து இஸ்ரேல் வெளியேற வேண்டுமென சதாம் குசைன் நிபந்தனை விதித்ததிலிருந்து தம்மீது தாக்குதல் நடத்தப்படுமானால் தமது முதலாவது குண்டு ரெல் அவிவில் தான் வெடிக்கும் என எச்சரித்ததுவரை இஸ்ரேலும் இந்தப் போரில் பின்னப்பட்டுள்ளது காட்டப்பட்டிருக்கிறது.

ஈராக் விசவாயுத் தாக்குதல் நடாத்தலாம் என்ற அச்சத்தில் தனது குடிமக்கள் அனைவருக்கும் 'முகக் கவசங்களை' விநியோகித்ததிலிருந்து ஈராக்கை கைக் குறிவைத்து ஏவுகணைகளை நிறுத்தியதுவரை இஸ்ரேலும் யுத்தத் தயாரிப்பில் முழுமையாக இறங்கியுள்ளது. அத்துடன் பதில் தாக்குதலாக தாம் அணுகுண்டு தாக்குதல் நடத்துவோம் எனவும் மிரட்டியுள்ளது. தற்போதைய நிலைமையிலும் பலஸ்தீனர்கள் மீதனான இராணுவ வன்முறையை கைவிடாத சியோனிஸ இஸ்ரேல் அரசு வளைகுடாப் போரில் புதிய சங்கடத்தில் சிக்கியுள்ளது.

இஸ்ரேலை ஆத்திரமூட்டி, வளைகுடா யுத்தத்தில் அதனையும் இறக்கிவிட்டு, இந்த யுத்தத்திற்குப் 'புதிய பரிமாணத்தை' ஏற்படுத்தவே ஈராக் தொடர்

www.tamilarangam.net

ந்து முயற்சி செய்துவருகிறது. இதன் விளைவாகவே 17.01.91இல் ஈராக்கின் முதலாவது ஏவுகணை இஸ்ரேலைத் தாக்கியது. இத் தாக்குதல் நடவடிக்கை தொடர்ந்து கொண்டிருக்கிறது.

இஸ்ரேல் ஈராக்கிற்கு எதிராக இராணுவ நடவடிக்கையில் நேரடியாக ஈடுபடுமானால் தற்போதைய யுத்தம் "யூத - அரபு" யுத்தமாக மாறி தற்போது தமக்கு ஆதரவளித்துக் கொண்டிருக்கும் அரபு நாடுகளைத் தங்களிடமிருந்து பிரித்து விடும் என்பதுடன் ஈராக்கின் பலமும் அதிகரித்துவிடும் என்ற பயத்தில் அமெரிக்காவும்; ஏனைய நாடுகளும் இஸ்ரேலை யுத்தத்தில் தலையிடவேண்டாம் என 'மன்றாடி' வருகின்றன. இஸ்ரேல் தன்னைப் பாதுகாத்துக் கொள்வதற்காக ஏராளமான உபகரணங்களை இனமாக விநியோகிக்கின்றன.

தன்னைத் தொடர்ந்துதாக்கிக் கொண்டிருக்கும் ஈராக்கைத் தாக்குவதா அல்லது தன்னை வளர்த்துவரும் அமெரிக்கா உள்ளிட்ட நேசநாடுகளின் வேண்டுகோளை ஏற்று தாக்காமலிருப்பதா என்பதே இஸ்ரேலின் சங்கடம். சண்டியனுக்கும் சங்கடம்தான்.

## லிபியாவின் குத்துக்கரணம்

1986இல் தன்னைக் - கொல்வதற்கான அமெரிக்கசதியில் போர் விமானங்களின் தாக்குதல்களுக்குள்ளான லிபியாவின் அதிபர் கடாபி இன்றைய வளைகுடா யுத்தத்தில் அமெரிக்காவின் நடவடிக்கைகளை ஆதரித்து நியாயப்படுத்தியிருப்பது அரசியல் அவதானிகளை ஆச்சரியப்படுத்தியுள்ளது. கடாபியின் இந்த நிலைப்பாடு இவரைப் போன்றவரின் "அமெரிக்க எதிர்ப்பு" எல்லாம் வெறும் ஸ்ரண்டுகள்தான் என்பதையே காட்டுகிறது.

உலகில் அரசுகளை எதிர்க்கும் விடுதலைக் குழுக்களுக்கு கடாபி ஆயுத உதவியும், பயிற்சியுமளிக்கிறார் என்று 'உலகநாடுகள்' குற்றம் சாட்டி வருகின்றன. ஆனால் அண்மையில் இலங்கை அரசுக்குத் தான் ஆயுத உதவி உட்பட அனைத்து உதவிகளையும் வழங்க இருப்பதாக கடாபி குறிப்பிட்டிருப்பதும் நினைவு கூரத்தக்கது.

## ஈரானின் நடுநிலை

10 வருட காலமாக ஈராக்குடன் போரில் ஈடுபட்டிருந்த ஈரான் புதிய ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திட்டு, போர் கைதிகளை பரிமாற்றம் செய்து கொண்டபின் இன்றைய யுத்தத்தில் நடுநிலை வகிப்பதாகக்கூறியுள்ளது.

(தொடர்ச்சி 48ஆம் பக்கம்)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஏக்கம்

குளிரின் கொடூரத்தில்
கொடிய பசி
கொஞ்சம் ஓய்வெடுத்தது.

குடும்பம் ஒன்று
குளிர்கால இரவுகள் பற்றி
பல கதைகள் பேசியது.

குடும்பம் என்றதும்
கூடவே
குருதி பாய்ந்த
கொடுமை நாட்களும்,
கூட்டத்தில் துணையிழந்த
துயரங்களும்,
தொலைந்துபோன உறவுகளும்,
இறந்துபோன நட்புகளும்,
இமைகளை நனைக்கையில்...

சாரளத்தோடு
சமரசம் பேசி
ஓடிவந்து
உச்சி முகரும்
அந்தக்
குளிர் தென்றலும்,

பாரபட்சமின்றி
பகலிலும் ஒளி
வழங்கும்
பளிங்கு நிலாவும்,
பறவைகளின்
பாடல் ஆலாபனைகளும்...

எத்தனையோ
யுகங்களென்றாலும்
இருப்பைவிட்டு
அகன்றுவிடுமா?

செயற்கையில்,
இருளில்,
துளைத்தெடுக்கும்
துருவக் குளிரில்
கழிப்பவை யாவும்
கடும் சித்திரவதைகளே.

அந்த நிலவும்,
கதை சொல்லும்
காற்றும்
இழந்தவைதானா?

சுதணு

www.tamilarangam.net



# வாசகர் கடிதங்கள்

இனத்துக்காக, இயக்கத்திற்காக, இளையவருக்காக என்றில்லாமல் மனிதர்களுக்காக, மனிதத்துக்காக, மனங்களுக்காகத் தொண்டு செய்வோம் எனும் நோக்கில் அராஜகக் கடலில் சுழியோடி, அக்கிரமக்காரர்களுக்கு வாய்ப் பூட்டுப் போடும் 'தூண்டில்' எமக்கும் கிடைப்பது மகிழ்ச்சியே.

இலங்கை அரசாங்கத்தினால் பதிவு செய்யப்படாத, தணிக்கை செய்யப்படாத சஞ்சிகைகளைப் பகிரங்கமாகப் பலர் பார்த்து கருத்துப் பரிமாறல்கள் செய்து கொள்ளுமளவிற்கு இங்கு நிலைமைகள் சீரில்லை.

இலங்கை ......

*

சுதந்திரமான சிந்தனையை மதிப்பவர்களும், அபிப்பிராயங்களையும், உண்மைகளையும் அறிவதில் நாட்டமுடையவர்களும் தூண்டிலை வரவேற்பர்.

எமது நாட்டு நடப்புகளையும், மக்களின் நிலைமைகள், நினைப்புகளையும் அறிந்துகொள்ளத் தூர இருந்துவரும் 'தூண்டில்' உதவுமளவிற்கு இங்கு கிடைக்கும் பெரும்பாலான ஏடுகள் உதவுவதில்லை.

இலங்கை ......

*

'தூண்டில்' எனக்கு மட்டுமன்றி எனது நண்பிகளுக்கும் சிறந்த கருத்துப் பரிமாறல், தேடல், விவாதித்தலுக்குரிய சஞ்சிகையாக கிடைத்துவருகிறது. தூண்டிலில் வெளியாகும் கருத்துகள், கட்டுரைகள், காட்டூன் சித்திரங்கள் எமக்கிடையே விவாதிக்கவும், விமர்சிக்கவும், சிந்திக்கவும் உதவியாக அமைகின்றது. நாமும் எழுத வேண்டும் என்ற ஆவலையும் தூண்டி வருகின்றது.

இலங்கை ......

*

பொருளாதாரத்தைப் பற்றியும் சமுதாயத்தொண்டு என்றும் சொல்லிக்கொண்டு மறைமுகப் போர்வையில் மக்களை வீழ்த்திக் கொண்டிருக்கும் தீய சக்திகளின் செயல்களை தெள்ளத் தெளிவாகப் புரிந்துகொள்ளும் வாய்ப்புள்ளதால் தூண்டிலைத் தொடர்ந்து அனுப்பிவைக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

இந்தியா ......



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஆண்டவனைப் பற்றி

ஆனந்த்

ஆசிரியர்– யாழ்ப்பாணத்தையாண்ட கடைசி மன்னன் யார்?

மாணவன்1– இன்று நாங்கள் சுமந்திருக்கின்ற அவலங்களை ஓர் தடவை சிந்தித்துப் பாருங்கள். சங்கிலியன்தான் கடைசியாக ஆண்டான் என்ற விடை எங்களுக்குத் தெரியாததல்ல. ஆனால் சங்கிலியன் ஆள்வதற்காக எவ்வளவு மனிதஉயிர்கள் சிதையிலே வலுக்கட்டாயமாகப் போடப்பட்டிருக்கும் என்பதை இன்றைய அநுபவங்களின் ஊடாக உங்களால் புரிந்துகொள்ள முடியாமலா போய் விட்டது? தொடர்ந்தும் இப்படியான வினாக்கள் ஆரோக்கியமானது தானா?

மாணவன்2– யாழ்ப்பாணம் எனும் இடம் எனக்கு நினைவுதெரிந்த நாட்களிலிருந்து சுடுகாடாகத்தான் இருக்கிறது. இதையெல்லாம் ஆள்வதற்கு மனிதர்கள் என்று சொல்லிக்கொள்பவர்களோ, மன்னர்களோ தேவையில்லை. இப்போது திரிகின்ற பேய்களே போதும்.

மாணவன்3– குருதியோடுகின்ற எமது தேச வீதிகளை ஓர் தடவை நினைவில் கொள்ளுங்கள். அருகிப்போய்விட்ட மனித முகங்களை, அரை உயிரோடு வீழ்ந்துகிடக்கும் மனிதநேயத்தை, வில்லெடுத்த வீரர்களால் விரட்டப்பட்ட இனங்களின் உறவுகளை... இப்படியாகப் பல விடயங்கள் இருக்கும்போது எப்போதோ ஆண்ட மன்னனைப் பற்றிய அறிதல்கள் அவசியமானதுதானா?

மாணவன்4– அடுத்த குண்டு எங்கே விழும் என்ற மரண பயத்துடன் வாழ்கின்ற எங்களுக்கு ஏன் மாஸ்ரர் மன்னரைப் பற்றிய ஆராய்ச்சிகளெல்லாம்?

மாணவன்5– எத்தனை ஆயிரம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

பேர் அரச கனவுகளுடன் பவனிவந்தபூமியிது. அவர்களுடைய கனவுகள் பலித்ததா என்ன? சிரசு கொய்யப்பட்டவர்களும், சிரசே தெரியாமல் எரிக்கப்பட்டவர்களுமாக இந்த மண்ணை இரத்தப்படுத்திவிட்டா போனுர்கள்? இல்லவேயில்லை. எச்சரித்துவிட்டுப் போனுர்கள். மன்னர்களின் போராட்டம் அர்த்தமற்றது, ஆபத்தானது. அராஜகமானது என. மக்களின் போராட்டம்தான் உயர்ந்தது, உன்னதமானது என. ஆதலால் மன்னர்களைப் பற்றிய கேள்வியே எங்களுக்கு ஆபத்தானது மாஸ்ரர். வேறு ஏதாவது கேளுங்கள்.

ஆசிரியர்– பத்தாம் வகுப்பு படிக்கின்ற உங்களிடம் இந்த இலகுவான கேள்வியைக் கேட்டதே உங்களுடைய எண்ணங்களை அறிவதற்காகத்தான். உண்மையில் நீங்கள் வித்தியாசமானவர்கள்தான்.

(திடீரென மாணவன் ஒருவன் ஆவேசமாக எழும்புகிறுன்)

மாணவன் 6– யாரடா வித்தியாசமானவன்? (எனக் கூறிக்கொண்டே காற்சட்டைப் பொக்கற்றுக்குள்ளிருந்து வெடிகுண்டை எடுக்கிறுன்.)

ஆசிரியரும், ஏனைய மாணவர்களும் வகுப்பறையை விட்டு நிலைதெறிக்க ஓட்டமெடுக்கின்றனர். அப்போதுதான் அவர்களுக்குப் புரிந்தது இப்போதும் யாரோ ஆள்கிறுர்கள் என்பது!!!

# யுத்தத்தின் மேலங்கள்

இரு மனிதர்கள் வாழ்ந்து வந்தனர்.

அவர்கள் இரண்டு வயதாகவிருந்தபோது கரங்களால் அடிபட்டனர்.

பன்னிரண்டு வயதாகவிருந்தபோது தடிகளால் அடிபட்டனர். கற்களால் எறிபட்டனர்.

இருபத்திரண்டு வயதாகவிருந்தபோது துப்பாக்கிகளால் சுடுபட்டனர்.

நாற்பத்திரண்டு வயதில் வெடிகுண்டுகளை வீசினர்.

அறுபத்திரண்டில் நோய்வாய்ப்பட்டனர்.

எண்பத்திரண்டில் இறந்து போயினர்.

இருவரும் அருகருகே புதைக்கப்பட்டனர்.

நூறு ஆண்டுகளுக்குப் பின் அவர்களின் கல்லறையை ஓர் நாக்கிளிப் புழு அரித்தபோது அங்கே முரண்பாடுகள் கொண்ட இரண்டு மனிதர்கள் புதைக்கப்பட்டனர் என்பதை அறிந்திருக்கவில்லை.

ஒரே பூமி! எல்லாம் இப் பூமியில்தான்!!

தமிழில் : நா. நிருபா

மூலம் : WOLFGANG BOCHERT

www.tamilarangam.net

சிறுகதை

# விடைபெறாத வினாக்கள்

— கமலேஸ் —

(கலம் 36இன் தொடர்ச்சி)

"ஏய் இங்க என்னடா புதுனம். ஒடுங்கடா எல்லாரும்"

அந்த அரக்கனின் அதட்டல் குரல் கேட்டதும் எல்லோரும் அகல விரிந்து கலைகிறார்கள்.

விழுந்து கிடந்த சைக்கிளை நிமிர்த்தி ஏறுகின்றேன். அக் குழந்தை என்னைப் பார்க்கின்றது. ஓடிப் போய் அள்ளி அணைத்துக் கொஞ்ச வேண்டும். எனக்கு ஆசைதான். என்ன செய்வது. என்றால் இனியும் அவ்விடத்தில் நிற்க முடியவில்லை. நான் சைக்கிளை மிதித்துக்கொண்டு ஓடுகிறேன்.

வழி நெடுகிலும் பெண்கள். கவலையுடன் கலவரமும் தெரிகிறது அவர்கள் முகத்தில்.

"என்னப்பா செத்துட்டாளோ?" வள்ளி மாமி என்னை வழி மறித்துக் கேட்கின்றா. நான் எதுவும் பேசாமல் போகிறேன்.

"பொடியா, உன்னத்தான் கேட்கன். செத்துட்டாளோ?"

"இல்ல மாமி" வள்ளிமாமிக்குப் பதில் சொல்லி வேகமாகச் செல்கின்றேன்.

'ஏன் இவர்கள் இப்பிடிக் கேட்கிறார்கள்? அவள் சாகவேண்டும் என்ற எண்ணமா? அல்லது அவர்கள் கையில் சிக்கியவர்கள் எவரும் தப்பியது இல்லை, இவள் மட்டும் எப்படித் தப்புவாள் என்ற எண்ணமா?'



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தென் ஊனயில் சைக்கி ஊச் சாத்துகிறேன். நான் வருவதற்கு முன்னமே விசயத்தை அறிந்து விட்டா அக்கா. என்னோடு அதை பற்றி எதுவும் பேசவில் லே.

"கெதியா சாப்பிட்டுப் போட்டுப் போ.." அக்கா பதறுகிறு.

"இல்ல. நான் ஒரு இடத் தையும் போகப் போறதில்ல" ஆத்திரமான எனது பதில் அக் காவைத் திடுக்கிட வைக்கின்றது.

"ஏண்டா, இங்க இருந்து அநியாயமாகப் பிடிபட்டு அடி பட்டுச் சாகப் போறியே?"

"ஓம். அப்பிடித்தான். சா கப் போறன். எந்தக் குற்றமும் செய்யாத அப்பாவிகள் எல் லாம் இந்த அநியாயக்காரங்க ளின்ரை கையால சாகக்குள்ள இவங்களுக்கெல்லாம் சாப்பாடு கொடுத்த குற்றத்துக்காக, உடு ப்புக் குடுத்த குற்றத்துக்காக,

தங்க இடம் குடுத்த குற்றத்துக் காக என் ஊன போல குற்ற வாளிகள் சாகிறதில எந்தவித மான பாவமுமில் லே"

என் பதிலுக்குப் பதிலாக அக்கா எதுவும் பேசவில் லே.

அன்றிரவு முழுவதும் நித் திரையில் லே. சாப்பிடாததாலோ என்னவோ தெரியாது ஒரே கொட்டாவியாக இருந்தது. ஆனு ல் அந்தச் சம்பவம் என் கண் முன்னே தெரிந்தது. அத்தோடு என் மனதில் எழுந்த கேள்விகள் என் ஊன நித்திரை செய்யவிடவி- ல் லே.

அநியாயங்க ளே கண்டும் காணுததுபோல் இருப்பதா? எடு த்துச் சொல்வதா? கேள்வி கே ட்பதா? எதிர்த்துப் போரா டுவதா? எங்காவது ஓடுவதா ? இல் லே சாவதா?

விடை காணமுடியாத கே ள்விகள் என் ஊன வாட்டி வதைத் தன.

விடிந்தது. கா லேக்கட ஊ முடிக்கத் தரவை நோக்கிப் போனேன். புளியடியில் சனக்கூட் டம் நிற்பது தெரிகிறது.

ஊருக்குள்ளிருந்த சனமெல் லாம் புளியடியை நோக்கி ஓடி க்கொண்டிருக்கிறது.

புதுனம் பார்த்து விட்டுத் திரும்பி ஓடிவந்து கொண்டிருந்த பைய ஊ நிற்பாட்டிக் கேட்டே ன். "என்னடா தம்பி சனம் ? என்ன விசயம் ?"

"ஒரு பொம்பு ளேயும் , புள் ளேயும் புளியடியில செத்துக் கிடக்குதுகள். அதுதான் அண்ண சனம். நீங்களும் போய்ப்பாருங் கோவன்"

என் நெஞ்சம் திக்கென்ற து. ஆ.. அந்தக் குழந்தை... சித்திரவதை செய்து அந்தத் தாயைக் கொன்றீர்கள். அந்தக் குழந்தையை என்னவென்றடா - கொன்றீர்கள். ஏறி மிதித்தீர்க- ளா? கழுத்தை நெரித்தீர்களா? ஒரே வெட்டாக வெட்டினீர்க ளா? அந்தக் குழந்தை என்ன குற்றமடா செய்தது?



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஐயோ. இனியும் என்னவென்று வாழ்வது? அக்கிரமங்களைச் சகித்துக்கொண்டு வாழ்வதா? அல்லது எடுத்துச் சொல்வதா? கேள்வி கேட்பதா? எதிர்த்துச் செல்வதா?

விடையில்லாத இந்த வினாக்களை நான் மீண்டும் என்னிடம் கேட்டுக்கொண்டே நடக்கின்றேன்.

எப்படி இவ்வளவு விரைவாக நடந்தேன் என்று எனக்கே தெரியவில்லை. என்னையறியாமலேயே என் கால்கள் புளியடியை வந்து சேர்ந்தன.

கூடிநின்ற சனங்களினூடே என் கண்கள் பரபரவென்று அவர்களைத் தேடுகின்றன.

உடம்பில் எந்தத் துணியும் இல்லாத நிலையில் முழுநிர்வாண கோலத்தில் அவளின் உடல் குப்புறக் கிடக்கின்றது.

இன்னும் கொஞ்சத் தூரத்திலும் சனக் கூட்டம். நான் அதை நெருங்குகிறேன்.

தூக்கியெறியப்பட்ட பொம்மையொன்றைப்போல் அக்குழந்தையின் உடல். என்ன அநியாயம். சாவில் கூட ஒரு தாயையும், பிள்ளையையும் சேர வைக்கும் மனம் இல்லாத அரக்கர்கள்தானே இவர்கள்.

இவள் சி.ஐ.டி.யா..? இவளா...? இவளிடத்தில் அவர்கள் என்ன உண்மையை எடுத்திருப்பார்கள்?

இனியும் அவ்விடத்தில் நிற்க என்னால் முடியவில்லை. சனங்களை விலக்கிவிட்டுக்கொண்டு வருகிறேன். அவைகள் என் கண்ணில் படுகின்றன.



www.tamilarangam.net

கலைந்து கிடக்கும் கந்தல் சீலைத் துண்டுகள், ஒரு அழுக்குப் புடவை மாராப்பு, இரண்டு தகரப் பேணிகள். இவைகள்தான் அந்தச் சி.ஐ.டி.யிடமிருந்த ஆவணங்கள். அவள் சி.ஐ.டி.தான் என்பதற்கான ஆதாரங்கள் மட்டுமல்ல, அவளின் வாழ்க்கையின் ஆதாரமே இவைகள்தான்.

முந்தாநாள் நடந்த அச் சம்பவத்தின் பின்பு இன்றுகாலை தரவைக்குப் போனேன்.

எப்போதும் நான் பார்த்து ரசிக்கின்ற அந்த ஒற்றைப் புளியமரம், அதன் அடியில் அழகிய மஞ்சள் மலர்களுடன் வளர்ந்திருக்கும் கள்ளிச் செடிப் பற்றை.. இன்றும் என் கண்களுக்கு தெரிகிறது. ஆனால் அதை இன்று நான் ரசிக்கவில்லை. ரசிக்கும்படி என் மனநிலை இல்லை.

பறவைகள் பல நிலத்தில் விழுந்து மேலே எழும்பி ஆகாயத்தில் வட்டமிடுகின்றன. நாய்கள் பல ஒன்றுடன் ஒன்றுமோதி எதற்கோ சண்டை பிடிக்கின்றன

இந் நிலையில் அந்த அழகிய மரமும் வாடி வதங்கியது போலவே என் கண்களுக்கு காட்சி தருகின்றது. இவ்வளவு நாட்களும் நான் ரசித்துப் பார்த்த காட்சி இன்று என் கண்களில் - ஓர் சுடலையாகவே தெரிகின்றது. இவ்வூரின் சுடுகாடு ஒன்று முந்தநாள்தான் திறப்பு விழாச் செய்யப்பட்டிருக்கிறது.

அச் சுடுகாட்டில் இன்னும் எத்தனை அப்பாவிகள் குழி தோண்டி புதைக்கப்படப் போகின்றார்களோ நானறியேன். ஆனால் புதைக்கப்படுவார்கள் என்பது உண்மை!

இரக்கமற்றவர்களின் ஈனச்செயலை இனியும் என் கண்களால் பார்க்கமுடியாது. அச் செயல்களை மட்டுமல்ல, அதைச் செய்பவர்களுக்குத் தலையாட்டி வாழும் இச் சமூகத்திலேயே நான் இனி வாழக்கூடாது.

நான் முடிவெடுத்துவிட்டேன். என் முடிவை யாரும் அறிய மாட்டார்கள். அறிந்தாலும் யாராலும் அதை மாற்றமுடியாது.

இராப்பூசைக்கு ஆலயமணி ஓசை அழைப்பு விடுக்கின்றது.

நானும் நண்பனும் கோயிலுக்குப் போகிறோம். அவன் போவது பெட்டைகளைப் பார்த்துவிட்டுப் பிரசாதம் சாப்பிட என்பதை நானறிவேன். ஆனால் நான் எடுத்திருக்கும் முடிவான முடிவை அவன் அறியமாட்டான்.





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தமிழீழ விடுதலைப் புலிகளால் கடந்த 6 மாத காலத்துள் பிற இயக்கங்களைச் சேர்ந்த சுமார் 6000க்கு மேற்பட்டவர்கள் கடத்திச் செல்லப்பட்டிருப்பது பற்றியும், அவர்களில் பலருக்கு என்ன நடந்தது என்று விசாரிக்கப்போகும் வேளைகளில், ஒன்றில் விசாரிக்கப் போபவர்கள் புலிகளால் ஏசியோ, அடித்தோ விரட்டப்படுகிறார்கள் அல்லது இறந்துவிட்டதாகக் கூறப்படுகிறது என்றும், உண்மையிலேயே இருநூறுக்கு மேற்பட்டவர்கள் இறந்துவிட்டதாகப் (ஒன்றில் தாம் தண்டனை வழங்கிவிட்டதாகவோ அல்லது விசாரணையின்போது மரணமடைந்துவிட்டதாகவோ!) புலிகளே 'தமிழீழ தடுத்துவைக்கப்பட்டோர் தகவல் மையத்தில்' அறிவிப்பு தொங்கவிட்டிருந்ததாகவும் யாழ்ப்பாணத்திலிருந்து 'விசா' எடுக்காமல் வரப் பயந்து பவுண் கொடுத்து 'காட்' பெற்று 'விசா' எடுத்து கொழும்புக்கு வந்துசேர்ந்த ஒரு நண்பர் தெரிவித்தார்.

இம் மாதம் 15ஆம் திகதிக்கு முன்பாகவே (விசா எடுத்து) கொழும்பு வந்தவர்கள் (உண்மையில் இது பாஸ் என்று சொல்லப்பட்டாலும் விசா என்றே வழக்கிலுள்ளது!) அனைவரும் திரும்பிவிட வேண்டும் என்றும், அப்படித் திரும்பாவிட்டால் அவர்கள் என்றென்றைக்கும் தமிழீழத்திற்கு திரும்ப முடியாதென்றும் புலிகள் அறிவித்திருப்பதாக வந்துகொண்டிருக்கும் தகவலைக் கேள்விப்பட்டதும் போகவா விட

எழுத்திலிருந்து:

# தேசத்தின் குறிப்புகள்

பிரஜைகள்

www.tamilarangam.net

வா எனத் தீர்மானிக்க முடியாமல் தடுமாறிக்கொண்டிருக்கும் இந்த நண்பருடன் பேசும்போது அவர் தான் போகாமல் இருக்கவிரும்புவதற்காகச் சொன்ன காரணமே மேற்சொன்னவை.

மற்றைய இயக்கத்தவர்களைக் கடத்திச் செல்வதும், அவர்களைக் கைதிகளாக்கி அவர்கள் மூலமே பதுங்குகுழிகள் வெட்டுவிப்பதும் நான் ஏற்கெனவே கேள்விப்பட்டவைதான். ஆனல் அவர் நான் கேள்விப்படாத இன்னொரு தகவலையும் சொன்னர்

"நாம் ஒருமுறை விட்ட தவறை இன்னொரு தடவை விடத் தயாரில்லை. இனி எல்லா இயக்கத்தையும் முழுதாக அழித்தபின் தான் எமக்கு நிம்மதி" என்று அவர்கள் கூறியதாகவும், என்.எல்எப்.ரி, தீப்பொறி குழு, தமிழ் மக்கள் பாதுகாப்புப் பேரவை போன்ற சின்ன இயக்கங்களின் எல்லா உறுப்பினர்களையும் அநேகமாகக் கைதுசெய்து விட்டார்கள் என்றும், இவர்களையினி விடப்போவதில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

சின்னதோ, பெரிதோ எந்த இயக்கத்தையும் விட்டு வைக்காமல் வேரோடு கிள்ளிவிடவேண்டும் என்பதுதான் அவர்களின் தற்போதைய நிலைப்பாடு என்றும் அவர் தெரிவித்தார்.

"அது சரி, அதற்கும் நீர் யாழ்ப்பாணம் போவதற்கும் என்ன சம்பந்தம்? நீர்தான் எந்த இயக்கத்திலும் இருக்கவில்லையே" என்று கேட்டேன் நான்.

அந்த நண்பர் என்னைப் பார்த்துப் பரிதாபமாகச் சிரித்தார். "நான் எந்த இயக்கத்திலும் இருக்கவில்லை என்பது உண்மைதான். அதனல்தான் எனக்கு கொழும்புக்கு வரப் பாஸ் கிடைத்தது. ஆனல் நான் இயக்கத்தில் இருந்தேனு என்பதை மட்டும் அவர்கள் பார்க்கவில்லை. எனது நண்பர்கள் எந்த இயக்கத்தில் இருந்தார்கள் என்றும் பார்க்கிறர்களே?"

"அதை எப்படி அவ்வளவு தெளிவாக அவர்களால் இனங்கண்டுகொள்ள முடியும்?"

"அதிலை என்ன கஸ்டம்? அவர்கள் எல்லா ஊரிலும் 'சிற்றூரவை' என்று ஒரு அமைப்பை உருவாக்கி இருக்கிறர்கள். இந்த அமைப்பில் அவர்களால் நியமிக்கப்பட்டவர்கள் முக்கிய பொறுப்பில் இருப்பார்கள். அவர்கள்—தான் புலிகளுக்கு யார் யார் எப்போது சாப்பாடு கொடுக்கவேண்டும் அல்லது எவ்வளவு பணம் கொடுக்கவேண்டும் என்று தெரிவிக்கிறர்கள். பங்கர்வெட்ட, சென்றிக்கு நிற்க ஆட்களை தெரிவு செய்கிறர்கள். உளவுசெய்து 'துரோகிகளையும்' மாற்று இயக்க சம்பந்தமுள்ளவர்களையும் பிடித்துக் கொடுக்கிறர்கள்.."

"எந்த அடிப்படையில் இந்த சிற்றூரவை தெரிவு செய்யப்படுகிறது? இவர்கள் ஏற்கெனவே புலி உறுப்பினர்களாகவோ ஆதரவாளர்களாகவோ இருந்தி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ருக்க வேண்டுமா?" என்று கேட்டேன் நான்.

"அப்படியென்றில்லை. அவர்கள் ஊரின் முக்கிய பிரமுகர்களை இந்தப் பதவிகட்கு நியமிப்பார்கள். பிற இயக்கத்தில் இல்லாமலிருந்தால் போதும். பொதுவாக ஊருக்குள் 'பெரிய மனிதர்களாக' இருப்பவர்களைத்தான் நியமிக்கிறார்கள். அவர்கள் நயத்தாலும், பயத்தாலும் கேட்டோ, மிரட்டியோ புலிகளின் விருப்பப்படியே பவுணையும், காசையும் வாங்கிவிடுவார்கள்"

"பவுண் தர மறுப்பவர்களுக்கு என்ன நடக்கிறது?"

"விசாரணை நடக்கிறது. விசாரணை புலி உறுப்பினர்களால் நடாத்தப்படும். விசாரணையின் பின்பும் தரமறுத்தால் பலவந்தமாகப் பிடுங்கப்படுகிறதாம். எனக்குத் தெரிய அப்படி ஒரு இடமும் நடக்கவில்லை. ஏனென்றால் எல்லோரும் பயத்தில் கொடுத்துவிட்டார்கள். ஆனால் எங்கடை ஊரிலை 2பவுண், 2மஞ்சாடிக்கு கொஞ்சம் குறைந்தத்தால் அழ அழ ஒரு கிழவிமனிசியின்ரை தாலிக்கொடியில ஒரு துண்டு வெட்டி எடுத்துக்கொண்டு போட்டாங்கள்"

நான் வாயடைத்த படி கேட்டுக்கொண்டிருந்தேன். அவர் தொடர்ந்து பல தகவல்களைச் சொல்லிக்கொண்டிருந்தார். அவற்றைக் கேட்டுக் கொண்டிருப்பதில் எனக்குப் பொறுமை இருக்கவில்லை.

"இதுக்கெல்லாம் சனம் ஒண்டும் கதைக்கிறேல்லையே?" என்று கேட்டேன் நான் பொறுமையிழந்து.

என்னை அவர் ஒரு விசித்திரப் பிராணியைப் பார்ப்பது போலப் பார்த்தார். பிறகு "சனங்கள் என்னத்தைச் சொல்லுறது? பச்சைமட்டை அடிக்கும், பங்கர் வெட்டுக்கும், ஒவருயப் போனால் பிடரியிலை வெடிவாங்கவும் தயாரெண்டால் ஏதாலும் கதைக்கலாம். கதைக்காமல் இருக்கிறவங்களையே முந்தி இயக்கத்தில இருந்ததெண்டதுக்காக பிடிச்சுக்கொண்டு போறாங்கள். நீ..." என்றார் அவர் எரிச்சலடைந்தவராக.

"எனக்கு நிலைமை தெரியாமலில்லை. சும்மா ஒரு நப்பாசை. அதுதான் கேட்டன்"

"சனம் தங்களுக்கை கதைக்கவே பயப்பிடுற நிலைமை அங்கை. கதைக்கிறவன் எல்லாம் போராட்டத்துக்கு எதிர், துரோகி எண்டதுதான் அவங்கட கருத்து"

எனக்கு அவரைத் திரும்பிப்போ என்பதா, வேண்டாம் என்பதா என்று தெரியவில்லை. அவரையும் அழைத்துக்கொண்டு எமது அரசியல் நண்பரைச் சந்திக்கப் போனேன். அவரிடம் இதுபற்றி ஏதாவது கருத்து இருக்கும், பேசுவோம் என நினைத்தேன். ஒருவேளை இந்த நண்பருக்கு அவர் ஏதாவது ஆலோச



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஊ சொல்லக்கூடும் எனவும் நம்பினேன்.

ஆனல் நாம் போனபோது நண்பர் முகத்தைத் தொங்க போட்டுக்கொண்டு உட்கார்ந்திருந்தார்.

எங்க ஊக் கண்டதும் "எப்படி" என்ற ஒற்றை விசாரிப்புடன் மௌனமாகிவிட்டார்.

என்னுடன் வந்த நண்பருக்கு இவர் ஆதரவு சொல்ல முடியுமா என்று தோன்றிற்று எனக்கு.

"என்ன ஒருமாதிரி இருக்கிருய்?" என்று கேட்டேன்.

ஊரிலிருந்து வந்த கடிதம் ஒன்றை என்னிடம் கொடுத்துவிட்டு எழுந்து உள்ளே போஞர் அவர்.

கசங்கிய நிலேயில் பென்சிலால் எழுதப்பட்டிருந்த அந்தக் கடிதத்தில் இருந்த விபரம் இதுதான்:

எமது அரசியல் நண்பரின் நண்பர் ஒருவர் 3 மாதங்களுக்குமுன் கடத்திச் செல்லப்பட்டிருந்தார். அவரது பெற்ருேர்போய் விசாரித்தபோதெல்லாம் தெரியாது எனப் புலிகள் சொல்லிவந்தார்கள். திடீரென ஒரு வாரத்திற்கு முதல் வந்து 15 நாட்களுக்கு முன் அவர் விசாரஊயின்போது இறந்துவிட்டதாகவும், தாம் அவரை அடக்கம் செய்துவிட்டதாகவும் கூறி அவரது அடையாள அட்டையையும், கடைசியாகப் போட்ட உடுப்பையும் கொடுத்தார்களாம். அவர் அணிந்திருந்த மணிக்கூட்டையும் கொடுத்திருந்தார்களாம். இப்போது அவர்கள் உடல் இல்லாததால் உடுப்பையும், மணிக்கூட்டையும் வைத்து 'சாவீடு' கொண்டாடுகிருர்கள் என்று எழுதியிருந்தது. கடிதம் கவனம், யாருடைய கையிலும் கொடுக்கவேண்டாம் எனத் திரும்பத் திரும்ப வலியுறுத்தப்பட்டிருந்தது. எழுதியவர் முன்ஜாக்கிரதையாக தனது பெயரை எழுதாமல் விட்டிருந்தார்.

நான் கடிதத்தைப் படித்து முடித்தபோது நண்பர் முகம் கழுவிவிட்டுத் திரும்பியிருந்தார்.

"யார் இந்த ஆள்?" என கேட்டேன் நான்.

"எனது சின்னவயசு முதல் ஒன்ருகப் படித்த நண்பன். மிகவும் ஆழமான சிந்தஊயும், பொறுப்பும் மிக்க அரசியல் அக்கறையும் உள்ள ஒருத்தன். மக்கஊயும், தேசத்தையும் மிகவும் உன்னதமான முறையில் நேசித்தவன். விடுதலேக்காக உழைக்க வேண்டுமென சதா சிந்தித்துக்கொண்டிருந்தவன்.."

"எந்த இயக்கம்?" என்று கேட்டேன் நான்.

எனது கேள்வியை நண்பர் அவ்வளவாக ரசிக்கவில்லே என்று தெரிந்தது, "இயங்க மறுக்கப்பட்ட ஒரு இயக்கம். அது அவ்வளவு முக்கியமோ?" என்ற அவரது பதிலிலிருந்து.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வெளியேறுபவர்கள் "துரோகிகள்" என்றால், இவர்கள் எப்படி "துரோகிகள்" ஆனார்கள்? ஏன் வெளியேறுகிறார்கள்?



"ஏன் பிடிச்சவங்கள்? " என்று கேட்டேன்.

"பிடிச்சதிற்கு நான் அவனைப் பற்றிச் சொன்ன காரணங்களே போதாதா? மேலதிகமாக ஏதாவது தேவையா? எல்லாரும் தம்மை அழிப்பதற்காகவே தமது இயக்கத்தைத் தவிர்ந்த வேறு இயக்கத்தைத் தெரிவுசெய்கிறார்கள் என்பது தானே புலிகளின் சித்தாந்தம். இவன் எந்த இயக்கம் என்பதை வட இவன் புலியல்ல என்பதுதான் இவன் பிடிபட்டதற்குச் சரியான காரணம்" என்றார் நண்பர்.

நான் என்னுடன் வந்த நண்பரை அறிமுகப்படுத்திவைத்து அவரது பிரச்சினையைப் பற்றிச் சொன்னேன்.

"மௌனம் கலக நாஸ்தி என்பதுதான் தற்போதைய மக்களது சித்தாந்தம். யாழ் ஆயர் சொன்னதுபோல் அபிப்பிராயம் எதுவும் இல்லாமலிருப்பதே நல்லது. ஆனால் மக்கள் நீ நினைப்பதைப் போல அல்ல. அவர்களைக் குறை கூறுவது தவறு. இது எமது மொத்த அரசியலின் வெளிப்பாடேயன்றி வேறொன்றுமில்லை. மூளாத் தீ போல் உள்ளே கனன்று முகத்தால் மிக வாடி இருக்கிறார்கள். சரியான காற்று வீசும்போது அது மூளத்தான் போகிறது. அப்போ தெரியும் நிலைமை" என்றார் நண்பர். குரலில் கொஞ்சம் சூடேறியிருந்தது.

"போறதைப் பற்றி நீங்கள்தான் முடிவு செய்யவேணும் நாங்கள் என்ன சொல்லமுடியும். இது ஒரு தனிநபர் பிரச்சினையில்லையே. இப்ப நிறையப் பேருடைய பிரச்சினையாக அல்லவா இது இருக்கிறது. ஆனால்...."

"ஆனால்?"

"ஆனால் இந்த சனநாயக மறுப்பும், பிற இயக்கங்கள் அழிப்பும் புலிகள் நினைப்பதுபோல்

அவர்களை வாழவைக்கப் போறதில்லை. அவர்களையே அழிவுப் பாதையில் தள்ளிவிடப் போகிறது"

"அதெப்படி? அவங்கள் அப்பிடி நினைக்கேல. எவ்வளவு செய்தாலும் ஒரு வெற்றிகரமான தாக்குதலை நடத்தினால் எல்லாம் சரியாய் போயிடும் என்று சொல்லுறாங்கள். உண்மையிலை கோட்டை வெற்றி, பிறகு மாங்குளம் வெற்றி எல்லாம் இதெல்லாத்தையும் சனங்களிட்ட இருந்து மறைச்சிடும்" என்னுடன் வந்த நண்பர் முந்திக்கொண்டு பதில்சொன்னார்.

"மறக்கவைக்கலாம். அது தற்காலிகமானதுதான். இந்த வெற்றிகள் இல்லாவிட்டால் கூட இது மறக்கத்தான் செய்யும். கொஞ்சக் காலத்துக்கு. ஆனால் அது தற்காலிகமான மறதியே. தவிர நடந்தவை நடந்தவைதானே? இதை எப்படியும் நீண்ட நாள் மூடிவைக்க முடியாது. மொசாட் பயிற்சி போல, போதை வஸ்துக் கடத்தல்போல எப்படியோ தகவல்கள் வந்துதான் சேரும்"

"ஆனால் அதுவரைக்கும்.!" என்னுடன் வந்தவர் அவசரப்பட்டார்.

"அதுவரைக்கும் — என்பது நல்ல கேள்விதான். ஆனால் அந்த 'அதுவரைக்கும்' ஆன காலம் — தானாகவே வரப்போறதில்லை. நாம் அதை உருவாக்கியாகவேண்டும். எப்படியோ உண்மையைத் தேடுற ஒரு போக்கு இதற்குள் இருந்து எழுந்து வருவதற்கான சமிக்ஞைகள் தெரியத்தான் செய்கின்றன"

"எதைச் சொல்கிறாய்?" ஈ.பி.டி.பி.யா!" என்று கிண்டினேன் நான்.

நண்பர் பதில் சொல்லாமற் சிரித்தார்.

"ஈ.பி.டி.பி.யும், ரெலோவும், புளொட்டும், ஈ.பி.யும் இப்போது அரசாங்கத்துடன் சேர்ந்துகொண்டு வெளிப்படையாகப் புலிகளைத் தாக்கத் தொடங்கியிருக்கிறார்கள். வன்னிப் பகுதியில் புளொட்டுக்கு சுதந்திரமான தாக்குதலை நடாத்த அரசாங்கம் அனுமதியளித்துள்ளது தேவையான ஆயுதங்களையும், வெடி மருந்துகளையும் அரசு வழங்கிவருகிறது. இருந்தும் இவர்களால் புலிகளை அழித்துவிடமுடியும் என்றோ அரசாங்கத்துடனை பேச்சுவார்த்தை மூலம் ஒரு சமாதானமான நிலையை தோற்றுவித்துவிடமுடியும் என்றோ ஒரு போதும் நம்பமுடியாது"

"அப்ப எதைத்தான் சமிக்ஞை என்று சொல்கிறாய்?" என்று கேட்டேன் நான்.

"நீ நினைக்கிற மாதிரி புலிகளை இவர்கள் தோற்கடிக்க முடியாமைக்கு இவர்களிடமிருக்கிற ஆயுதரீதியான பலவீனம் தான் காரணம் அல்ல. இவர்களது அரசியல் துரோகத் தனம் இருக்கும்வரை புலிகளை அழிக்கவோ, மக்களைத் தம்பக்கம்

www.tamilarangam.net

வென்றெடுக்கவோ ஒருபோதும் இயலாது. தவிரவும் இலங்கையரசுடனை பேச்சுவார்த்தை என்பது ஒற்றை ஆட்சிமுறைக்குள் எப்படிப்பட்ட ஒரு 'தீர்வை' காணலாம் என்பதாக இருக்கும்வரை ஒருபோதும் எதுவும் சாத்தியமில்லை. இந்த இயக்கங்கள் தமது ஈழக் கோரிக்கைக்கும், சுயநிர்ணய உரிமைக்கும் துரோகம் செய்துவிட்டு, பல நூற்றுக் கணக்கான இளைஞர்களின் தியாகத்தைக் காலால் மிதித்துவிட்டு இலங்கையரசுடன் பேச்சுவார்த்தை நடத்துகிறார்கள். அதை ஆதரிப்பதுடன் மட்டுமல்லாமல் அரசோடு சேர்ந்து நின்றுகொண்டு அதன் தாக்குதலிலும் பங்குபற்றுகிறார்கள். இது மேலும் மேலும் இவர்களை மக்களிடமிருந்து அந்நியப்படுத்திவருகிறது. ஆனால் புலிகள் இந்திய இராணுவத்துடனும் சரி, இலங்கை இராணுவத்துடனும் சரி எதிர்த்து நின்று போராடுகிறார்கள். அவர்களது அரசியல் சந்தர்ப்பவாதங்களையும் முட்டாள்தனங்களையும் விட்டுவிட்டுப் பார்த்தால் மேலோங்கி தெரிவது இந்த இயக்கங்கள் - போல் துரோகமல்ல, போராட்டமே! அதனால்தான் இவர்களால் வெல்லமுடியாமல் இருக்கிறது. அதோடை இலங்கை அரசாங்கம் - பௌத்த சிங்கள பேரினவாதத்தை அடிப்படையாகக்கொண்ட அரசாங்கம்- தமிழ் மக்களுக்கு உரிமைகள் வழங்குமென நம்பி புலிகளைப் போலவே இவர்கள் பேசும் வரை பேச்சுவார்த்தையில் வெற்றிபெறவும் முடியாது"

"வெற்றி பெற்றாலும் அதை நடைமுறைப்படுத்தும் சக்தி இவர்களுக்குக் கிடையாது" என்றார் என்னுடன் வந்த நண்பர் இடைமறித்து.

"அப்ப உன் கண்ணுக்குப் படுகிற சமிக்ஞைதான் என்ன?" என்று கேட்டேன் நான்.

"இப்போதுதான் புலிகள் முன்னெப்போதுமில்லாதவாறு - பெருமளவில் அம்பலமாகத்தொடங்கியுள்ளார்கள். அவர்களது சனநாயக மறுப்பும் அதை மிகவும் தெளிவாக வெளிக்கொணருகிறது. போராட்டத்தின் தேக்கம் பல பிரச்சினைகளையும் ஆய்வுசெய்யும் தேவையை எல்லா இடங்களிலும் ஏற்படுத்திவருகிறது. இதனால் அவர்கள் தமது அரசியல் நிலைப்பாட்டை, கோட்பாடுகளை மறுபரிசீலனை செய்ய வேண்டும். அல்லது மேலும் மேலும் மோசமான பாசிசத்தன்மை வாய்ந்த ஒரு குழுவாகச் சீரழியவேண்டும் என்ற நியதிக்குத் தள்ளப்படுவார்கள்"

"அது எப்படிச் சொல்லுறாய்? அவங்கள் ஏற்கெனவே படுமோசமான பாசிஸ்டுகளாகத் தானே நடந்துகொள்ளுறாங்கள். ஆனால் ஒரு குழுவாகச் சீரழியவில்லையே?"

"சனநாயக விரோதப் பண்பு மட்டுமே ஒரு இயக்கத்தை பாசிஸ இயக்கம் என வரையறுக்கப் போதுமானதல்ல.

(தொடர்ச்சி 32ஆம் பக்கம்)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அந்நியத்தின் மழலைகள்

எங்கள் தாய்மண்ணின் தெருக்களில்
சாதித்துவ நெருப்பினில்
தீய்ந்துபோனவர்கள் நாங்கள்.....

தென்னிலங்கையில் புகைக்கும்
இனவாதக் கருமைகளினல்
மரணித்து வாழ்பவர்கள் நாங்கள்...

தமிழகத்தின் மடியினிலே
ஈழத்தவரென்ற
சந்தேக விழிமொய்ப்பினல்
சரிந்து போனவர்கள் நாங்கள்....

இங்கு
ஐரோப்பியக் கரைகளிலோ
பஞ்சத்தில் புலம்பெயர்ந்த
கறுப்பு அகதிகளென்ற
இகழ் சிரிப்புகளினல்
"இல்லாமல்" போபவர்கள் நாங்கள்.

ஓ...
அந்நியங்கள்தான் எங்கள்
அன்பான அன்னையரா???

சங்கர் புஸ்பா

# செய்திக் குறிப்பு

01.12.90 வீரகேசரி

நமது இரு நாடுகளுக்கும் இடையே நிலவிவரும் பாரம்பரியமானதும், நெருங்கியதுமான நட்புறவானது தங்கள் பதவிக் காலத்தில் மேலும் பலம் பொருந்தியதாக அமையும் என்பதில் எனக்கு நம்பிக்கையுண்டு — பிரிட்டிஷ் பிரதமருக்குப் பிரேமதாச அனுப்பிய வாழ்த்துச்செய்தி.

வவுனியா கண்டி வீதிப் பகுதியில் இனந்தெரியாத குண்டர்களின் தாக்குதல்களினால் 10பேர் வெட்டுக்காயங்களுக்குள்ளாகியுள்ளனர்.

02.12.90 வீரகேசரி

புலிகளை இடம்பெறச் செய்யும் வகையில் இடைக்கால நிர்வாக அமைப்பைக்கொண்டு வருவதற்கு அரசின் மட்டத்தில் ஆலோசிக்கப் படுகிறது.

வடக்கு, கிழக்கு மாகாண முன்னாள் தமிழின வரலாற்று ஆராய்ச்சி பணிப்பாளர் அருளர் ஜனாதிபதியின் வெளியுறவு ஆலோசகரைச் சந்தித்துப் புலிகள்—அரசு பேச்சுவார்த்தைகள் மீண்டும் ஆரம்பிக்கவேண்டியசூழ்நிலை தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

03.12.90 வீரகேசரி

மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் மழை பெய்து வருவதினால் அகதி முகாம்களிலும், காட்டுப் பகுதிகளிலும் வாழ்ந்துவரும் அகதிகள் பெரும் கஷ்டங்களை அனுபவித்து வருகின்றனர்.

பாதுகாப்புக்கு உத்ரவாதம் இல்லாமல் தமது சொந்த இடத்திற்கு போய்க் குடியேறத் தயாரில்லை என்று அகதி முகாம்களில் தங்கியிருக்கும் தமிழ் அகதிகள் தங்களைச் சந்தித்த அரசியல் கட்சிப் பிரதிநிதிகளிடம் தெரிவித்துள்ளனர்.

04.12.90 வீரகேசரி

போருக்கு இராணுவத்தைத் தயார் படுத்தினால் அவர்களை இறுதி வரை போராட விட வேண்டும். தயார்படுத்திவிட்டு பின்னர் அரசியல் ரீதியான உத்தரவுகளுக்காக அவர்களைக் காத்திருக்கச் செய்யக்கூடாது. ஈ.பி.டி.பி. தலைவர் டக்ளஸ் தேவானந்தா இப்போது அரசாங்கத்தின் ஆசைக்குரிய பையனாகிவிட்டார். திம்பிரிகஸ்யாயவிலுள்ள ஈ.பி.டி.பி. காரியாலயத்தை பாதுகாக்க அவர்களுக்கு அரசாங்கம் ஆயுதங்களை வழங்கியுள்ளது. சிலவிடயங்களில் அரசின் பேச்சாளராகவும், வடக்கைப் பொறுத்தவரை பிரதம தளபதியாகவும் இந்தத் தேவானந்தா விளங்குகிறார்—சு.க.எம்

பயங்கரவாதம் முறியடிக்கப்படவேண்டுமானால் இந்திய அரசுடன் நல்லுறவு வளர்க்கப்படவேண்டும். இந்தியாவைப் பகைப்பதனால் நடக்கப்—போவது எதுவுமில்லை— ஈ.பி.ஆர் எல்.எவ்

பாராளுமன்றத்துக்குப் பதிலளிக்க வேண்டிய கடமையை ஜனாதிபதிகொண்டிருக்காதது இந்நாட்டு அரசியலமைப்பில் ஒரு குறைபாடாகவும், வெற்றிடமாகவும் இருக்கிறது.

பாடசாலைக்கு அணிந்துசெல்ல உடுத்த உடைக்கு மாற்றுச் சீருடை இல்லாததால் மாணவியொருவர் நஞ்சருந்தி தற்கொலைசெய்து கொண்டார்.

பொலிஸ் தடுப்புக்காவலில் இருந்தபோது துன்புறுத்தல்களுக்கும், உடல்

www.tamilarangam.net



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ரீதியான சித்திரவதைகளுக்கும் ஆளாகியவர்கள் தொடர்பாக, பொலிஸ் அதிகாரிகளுக்கு எதிராக செய்யப்பட்டுள்ள நூற்றுக் கணக்கான முறைப்பாடுகளை
முறைப்பாடுகளை விசாரிக்க குழு ஒன்று நியமிக்கப்படவேண்டும்–வாசுதேவ

05.12.90 வீரகேசரி

கிழக்கு மாகாணத்திலிருந்து குறிப்பாக அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்டங்களிலிருந்து சுமார் 4,000பேர் காணமற்போயுள்ளனர். இவர்களுக்கு என்ன நடந்தது என்பது இன்னமும் தெரியவில்லை. அகதி முகாம்களிலிருந்தும், தேடுதலின்போதும் பலர் கைதுசெய்யப்பட்டனர்.

அடிப்படை மனித உரிமைகள் ஆணைகுழுவில் அரசுக்கு நெருங்கியவர்கள்தான் இடம்பெற்றுள்ளனர். இந்நிலையில் இந்தக்குழு அமைப்பு வெறும் கண் துடைப்பே –சு.க. எம்.பி

இலங்கையிலே 10 இலட்சத்து 84 ஆயிரத்து 990 அகதிகள் இருக்கிறார்கள். இந்தியாவில் இருக்கும் இலங்கை அகதிகளின் எண்ணிக்கை 1 இலட்சத்து 20ஆயிரம்.

06.12.90 வீரகேசரி

பொத்துவில் பாணமை பகுதியில்76 அப்பாவி மக்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

இரண்டாயிரமாவது ஆண்டில் யாவருக்கும் புகலிடம் கிடைக்கும் என்று கூறப்படுகிறது. ஆனால் வடக்கு, கிழக்கிலோ யாருக்குமே புகலிடம் இல்லை– ஹிஸ்புல்லா

யு.என்.பி.யின் மகாநாட்டில் புளொட் கலந்துகொள்ளத் தீர்மானித்துள்ளது.

கடந்த டிசம்பரில் முடிவுற்ற 5ஆம் வகுப்புப் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மலையகத் தமிழ்த் தோட்டத் தொழிலாளர்களின் பிள்ளைகளுக்கு அரசாங்கத்தினால் ஒதுக்கப்பட்டுக் குறிப்பிடப்பட்டிருக்கும் உயர்தரப் பாடசாலைகளில் அனுமதி வழங்கப்படவில்லை.

07.12.90 வீரகேசரி

புலிகள் ஆயுதங்களைக் கைவிட்டுவந்தால் நிபந்தனைகள் இல்லாமற்பேசலாம். புளொட், டெலோ, ஈ.பி.டி.பி. ஆகியவற்றின் உறுப்பினர்கள் இப்போது அரசாங்கப் படையுடன் சேர்ந்து புலிகளை விரட்டுவதிலும், தமிழ்க்கிராமங்களைப் பாதுகாப்பதிலும் ஈடுபட்டுள்ளனர். இவர்கள் ஒழுங்கான முறையில் திறமையாகச் செயற்பட்டால் நிரந்தர இராணுவத்தில் சேர்த்துக்கொள்ளப்படுவர் – பாதுகாப்பமைச்சர்

சுகாதார அமைச்சு யாழ்ப்பாண– வைத்தியசாலைக்கு அனுப்பும் மருந்து வகைகளுக்கு கூட்டுப்படைகளின் தலைமையலுவலகம் கட்டுப்பாடு விதித்துள்ளது.

வடக்கு–கிழக்கு இணைப்பு தொடர்பான சர்வசன வாக்கெடுப்பு திகதி அடுத்த ஆண்டு ஓகஸ்ட்22 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

மூளைக்காய்ச்சல், டெங்குக் காய்ச்சல், மலேரியா, மூளையில் ஏற்படும் மலேரியாக் காய்ச்சல் போன்ற பயங்கரமான 4 தொற்று நோய்கள் நாடு முழுவதிலும் பரவுவதற்–கான சந்தர்ப்பங்கள் உண்டு என்ற அபாய அறிவிப்பை சுகாதார அமைச்சு விடுத்துள்ளது.

08.12.90 வீரகேசரி

அமைச்சர்கள், எம்.பி.க்கள், அரசியல்வாதிகள், முக்கிய அதிகாரிகள் ஆகியோர் சம்பந்தப்பட்ட 1600 தொலைபேசிகள் ஒட்டுக்கேட்கப்படுகின்றன.

09.12.90 வீரகேசரி

புலிகளும், அரசும் ஏற்கெனவே பல மாதங்களாக சுமுகமான முறையில் பேச்சுவார்த்தை நடத்தியவர்கள். ஒருவரையொருவர் புரிந்து கொண்டவர்கள். ஏற்கெனவே எதிரிகளாக இருந்தவர்கள் ஒன்று சேர்வதற்குத்தான் நடுவர்கள் தேவை. ஏற்கெனவே நண்பர்களாக இருந்து மனம் மாறிப் பிரிந்தவர்களை மீண்டும் இணையவைக்க இடைத் தரகர்கள் தேவையில்லை. எனவே இரு தரப்பினரும் தத்தம் தேவைகளை உணருகையில் மீண்டும் தாங்களே கூடிப் பேச்சுவார்த்தை நடத்துவார்கள்– தொண்டமான்

இலங்கை இராணுவத்தின் ஒத்துழைப்புடன் புளொட் வட பகுதிக்குச் சென்றுகொண்டிருக்கிறது.

10.12.90 வீரகேசரி

இப்போது புதிதாகப் புலிகள்

பாதர் பிரிகேட் என்ற ஒருபிரிவை அமைத்துள்ளார்கள். இதில் 40 வயதிற்கு மேற்பட்டவர்கள் பலவந்தமாக இணைக்கப்பட்டு பங்கர்கள் வெட்டவும், சமையல் வேலைகளுக்கும், சென்றி கடமைகளுக்கும் ஈடுபடுத்தப்பட்டுள்ளார்கள்.

இலங்கை அரசாங்கத்தோடு நேரடியாக நாங்கள் பேசத் தொடங்கிய பின் எமக்குள்ள கௌரவத்தை இலங்கை அரசாங்கம் வழங்கியுள்ளது. எங்களின் எஜமானர்கள் போல் அவர்கள் நடந்துகொள்ளவில்லை. எனவேதான் ஈ.பி.டி.பி. இலங்கை அரசோடு மிகவும் வெளிப்படையாகவே தனது ஆதரவைத் தெரிவித்த பின் வேறுசில தமிழர் அமைப்புகளும் தமது ஆதரவை வெளிப்படையாகவே தெரிவிக்க முன்வந்துள்ளன — ஈ.பி.டி.பி.

புலிகளுக்குள் அதிருப்திகள் ஏற்பட்டு பலர் வெளிநாடுகளுக்குத் தப்பியோட முயல்கிறார்கள். மக்களிடம் விரட்டி வசூலித்த பணத்துடன் இவர்கள் தப்பியோடிவருவது அதிகரித்து வருகிறது. மட்டக்களப்பில் புலிகளது நிதிப் பொறுப்பாளர் சுரேஷ் 15 இலட்சம் ரூபா பணத்துடன் தப்பியோடும்போது சந்திவெளி என்னுமிடத்தில் வைத்துப் புலிகளால் பிடிக்கப்பட்டு வந்தாறுமூலையில் வைத்துச் சுட்டுக்கொல்லப்பட்டார். இவரோடு கோணேஷ் என்பவரும்கொல்லப்பட்டுள்ளார்.

11.12.90 வீரகேசரி

தம்பலகாமம் மகாவித்தியாலயக்கட்டிடங்களிலும், ஆஸ்பத்திரிக் கட்டிடங்களிலும் தங்கியுள்ள அகதிகள் அங்கிருந்து வெளியேறவேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கைக்கு வரும் சீனக்குழுவுக்கும் இலங்கை அரசுக்குமிடையே இருபக்க வர்த்தக உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்படுகிறது. அக்குழுவுடன் வடக்கு-கிழக்குப் பிரதேசத்தில் தொடரும் யுத்தத்திற்கு தேவையான ஆயுதங்களை இறக்குமதி செய்வது தொடர்பாகப் பேச்சுவார்த்தைகள் நடைபெறுகின்றன.

13.12.90 வீரகேசரி

மட்டக்களப்பில் வன திணைக்களகாவலாளி ஒருவர் இனந்தெரியாதோரால் கடத்தப்பட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

வவுனியாவில் சிவகுமார் என்பவர் இராணுவத்தால் கொல்லப்பட்டார்.

அடுத்த வருடம் முதல் மீண்டும் பாடசாலைகளில் இருநேர வகுப்புகள் நடத்துவதற்குக் கல்வியமைச்சு திட்டமிட்டுள்ளது.

எமக்கு கஷ்டம் வரும்போதெல்லாம் ஜப்பான் உதவி வருகிறது. ஆகவே ஜப்பான் சிறந்த நட்பு நாடாகும்— தகவல்துறை இராஜாங்க அமைச்சர்

உங்கள் வழிகாட்டல்களும், உதவிகளும் எங்களையும் நல்ல நிலைக்கு உயர்த்தும் என நம்புகிறோம். நம்மிரு நாடுகளும் புத்தர் சொன்னபடி வன்மையை வன்மையால் வெல்ல முடியாது, அன்பாலேயே வெல்ல முடியும் என்ற போதனையைப் பின்பற்றும் நாடுகளாகும்— ஜப்பானுக்கு நன்றி தெரிவித்து இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத் தலைவர்

14.12.90 வீரகேசரி

பெருந்தோட்டத் தொழிற்துறையில் தொழிற்சங்கங்களைக் கட்டுப்படுத்துமுகமாக 'வெட்டுப் புள்ளி' முறை ஒன்றுகொண்டுவரப்படவிருக்கிறது.

இந்தியக் கடவுச்சீட்டுப் பெற்ற தோட்டத் தொழிலாளர்களை விரைவாக இந்தியாவுக்கு அனுப்பிவைக்க நடவடிக்கை எடுக்கவேண்டும். அவ்வாறுல் தேயிலை உற்பத்திச்—செலவைக் கணிசமானளவு குறைக்க முடியும் —சு.க.எம்.பி

அரசு எதிர்பார்த்தளவு ஆயுதப் படைகளில் சேர முஸ்லீம்கள் முன்வரவில்லை. பத்திரிகைகள் முஸ்லீம் வாலிபர்களைப் படைகளில் சேரத் தூண்ட வேண்டும்— பாதுகாப்பமைச்சர்

13 கூட்டுத்தாபனங்களும், வேறுசில நிறுவனங்களும் மக்கள் மயப்படுத்தபடவுள்ளன. இவற்றில் பெரும்பாலான பங்குகள் வெளிநாட்டு முதலீட்—டாளர்களுக்கு விற்கப்பட்டுள்ளன.

கடந்த ஜூலை மாதத்திற்குப் பின்னர் இதுவரை 60ஆயிரம்பேர்விசா பெற்று இந்தியா சென்றுள்ளனர். மாதாந்தம் சுமார் 11 ஆயிரம் பேர் விமானம் மூலம் இந்தியா செல்கின்றனர்.

எமது நாட்டின் தேசிய வருமானத்தில் 47சத வீதத்தை முழு சனத்



www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

தொகையில் 10 சதவீதத்தினர் அனுபவிக்கின்றனர். எஞ்சிய 43சதவீதத்தையே சனத்தொகையில் 90சதவீதத்தினர் பெறுகின்றனர்- சப்பிரகமுவ மாகாணசபையின் எதிர்க்கட்சித் தலைவர்

14.12.90 தாயகம்

நீலாவணையில் 76 தமிழர்கள்கொடூரமான முறையில் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். வீடுகளில் இருந்தோரும், வாகனங்களில் சென்றோரும் இழுத்துவரப்பட்டு கழுத்தில் டயர்கள் போடப்பட்டு உயிருடன் கொழுத்தப்பட்டுள்ளனர்.

15.12.90 வீரகேசரி

2000ஆம் ஆண்டில் யாவருக்கும் புகலிடம் என்பது அரசாங்கத்தின் விளம்பரமாகவே இருக்கிறது. மலையகத் தமிழ் தோட்டத் தொழிலாளர்களைப் பொறுத்தவரை 200வீடுகளைக்கூட அரசு கட்டிக் கொடுக்கவில்லை. 150 வருடங்களுக்கு முன்னர் அமைக்கப்பட்ட லயன் காம்பறுக்களில்தான் 90சதவீதமான தோட்டத் தொழிலாளர்கள் இன்னமும் வாழ்ந்துவருகிறார்கள்.

அம்பாறை மாவட்டத்தில் தமிழ் இளைஞர்கள், வயோதிபர்கள் பலர் தினமும் காணமற் போகும் சம்பவங்கள் தொடர்ந்துகொண்டிருக்கின்றன.

கொழும்பில் உள்ள முகாம்களில் முஸ்லீம் அகதிகளை அனுமதிக்க வேண்டாமென அதிகாரிகள் அறிவித்துள்ளதினால் பல அகதிகள் பாதையோரங்களில் அநாதைகளாக அலைந்து அல்லல்பட்டுக்கொண்டிருக்கின்றனர்.

இந்தியாவின் முன்னாள் பிரதமர் வி. பி. சிங் தொலைக்காட்சியில் தோன்றுவதை விரும்பவில்லை. அதனால்தான் அவர் பதவியில் நீண்டகாலம் இருக்கமுடியாமல் போய்விட்டது- இலங்கை தகவல் இராஜாங்க அமைச்சர்.

16.12.90 வீரகேசரி

கண்டி தலதா மாளிகாவுக்கு அருகிலுள்ள மாமடுவ திடலில் சத்தியாகிரகம் செய்ய முயன்ற ஐ. சோ. மு. அங்கத்தவர்கள் பொலிசினால் விரட்டப்பட்டுள்ளனர். வாழ்க்கைச்செலவைக் குறைக்கவும், அடக்குமுறைகளை நீக்கவும், ஜனநாயகத்தை வளர்க்க இடமளிக்கவும், மனிதப்படுகொலைகளை நிறுத்தவும் என்ற கோரிக்கைகளை கொண்ட சுவரொட்டிகளைப் பொலிசார் அவர்களிடமிருந்து கைப்பற்றினர்.

வடக்கு- கிழக்கில் நிரந்தர அமைதி ஏற்படுத்தக்கூடிய வழிவகைகளைப் பற்றி ஆராய இந்திய அரசு தமிழர் குழுக்களை டில்லிக்கு அழைத்தால் அதனைச் சாதமாகத் தமது கட்சிகள் பரிசீலிக்குமென ஈ. பி. ஆர். எல். எவ், ஈ. என். டி. எல். எவ், ரி. யு. எல். எவ், ரெலோ, புளொட் ஈரோஸ் குழுக்கள் தெரிவித்துள்ளன

15.12.90 டெய்லி நியூஸ்

இலங்கையில் இயங்கிக்கொண்டிருக்கும் அரசு சார்பற்ற 3,000 நிறுவனங்களை ஆராய விசாரணைக்குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

16.12.90 ஐலண்ட்

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைதீவு, மாங்குளம் ஆகிய பகுதிகளில் புலிகளுடன் சேர்ந்து வெள்ளை நிற வெளிநாட்டவர்களும் இராணுவத்தினருக்கு எதிராகச் சண்டையிடுவதாகப் புளொட் தெரிவித்துள்ளது.

18.12.90 வீரகேசரி

மாகாணசபை நிதி ஒதுக்கீடு மீதான வாக்கெடுப்பில் த. வி. கூ, முஸ்லீம் காங்கிரஸ் எம். பி.க்கள் அரசுடன் சேர்ந்து வாக்களித்துள்ளன.

19.12.90 வீரகேசரி

பெரிய நீலாவணைப்பகுதியில் 10ம் திகதி 30க்கு மேற்பட்டோர்கைது செய்யப்பட்டுள்ளனர். 16ஆம் திகதி ஏறுவூரில் முஸ்லீம் ஊர்க்காவற்படையினரும், இராணுவத்தினரும் 1பேரைக் கைது செய்துள்ளனர். வெல்லாவெளியில் 5 பேரை சிங்களஊர் காவற்படையினர் கடத்தியுள்ளனர்.

கடந்த மாதத்திலிருந்து கிராமப்புறங்களுக்கு வவுனியாவிலிருந்து உணவு எரிபொருள் மற்றும் பாவனைப் - பொருட்கள் போய்ச் சேராததால் இப் பகுதிகளில் உள்ள மக்கள் பட்டினியை எதிர்நோக்கியுள்ளனர்.

20.12.90 வீரகேசரி

இப்போது நடைபெறும் மோதலை முடிவுக்குக் கொண்டுவர அமெரிக்கா, சோவியத், இங்கிலாந்து, கனடா, இந்தியா, ஜப்பான், அவுஸ்திரேலியா ஆகிய நாடுகளின் தூதுவர்களைச் சந்தித்து ஒத்துழைப்புக் - கோரியதாக அருளர் தெரிவித்துள்



www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ளார்.

யுத்தத்தினால் வடக்கு, கிழக்கில் 13 இலட்சம் மக்கள் வீடுகளை இழந்த அகதிகளாகியுள்ளனர். 2 இலட்சத்துக்கும் அதிகமானவர்கள் அகதிகளாக இந்தியாவுக்கும், வேறு நாடுகளுக்கும் போயுள்ளனர். சுமார் 2இலட்சம் வீடுகள் முற்றாக நிர்மூலமாக்கப்பட்டுள்ளன.

1983-87 காலப்பகுதியில் வடக்கு, கிழக்கு மாகாணத்தில் சுமார் 1,300 பிள்ளைகள் தங்களது தந்தையர், தாய் இருவரையும் இழந்துள்ளனர். 90ஜூன் 11க்குப் பிறகு இத்தகையவர்களின் எண்ணிக்கை இருமடங்காகியுள்ளது.

21.12.90 வீரகேசரி

மட்டக்களப்பில் டெலோ இயக்கத்தைச் சேர்ந்த டேவிட், அவரது மனைவி, அவர்களின் நண்பர் ஆகிய மூவரையும் சுட்டுக்கொன்ற ஆயுதக் குழுவொன்று ஒன்றரை வயதான பிள்ளையையும் காயப்படுத்திச் சென்றுள்ளது.

போதிய ஊசி மருந்துகள் இன்மையாலும், வாகனப்போக்குவரத்தின்மையாலும் வட பகுதியில் பலர் இறந்துள்ளனர். பிரசவத் தாய்மார்கள் பலர் வாகன வசதியின்றி வைத்தியசாலைக்குச் செல்ல முடியாமையினால் வீடுகளிலேயே இறந்துள்ளனர்.

22.12.90 வீரகேசரி

மட்டக்களப்பு வாவிக்கு மீன் பிடிக்கச்சென்ற 6 மீனவர்கள் ஆகாயப் படையினரால் கொல்லப்பட்டுள்ளனர்.

முஸ்லீம் வாலிபர்கள் ஆயுதப்படைகளில் சேருவதில் அக்கறை காட்டவில்லையென பாதகாப்பமைச்சர் தெரிவித்த கூற்று எந்தவித ஆதாரமுமற்றது. நூற்றுக் கணக்கில் எமது இளைஞர்கள் படைகளில் சேரத் தயாராயிருக்கிறார்கள் -மு.கா

களுத்துறை நிர்வாக மாவட்டத்தில் மத்துகம பட்டதொல அரச தோட்டத்தில் 4 லயக் காம்பறுக்களில் வாழ்ந்துவரும் 28 தமிழ்க் குடும்பங்களை வெளியேற்ற முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

23.12.90 வீரகேசரி

வடக்கு, கிழக்கில் புலிகளுக்கு எதிராக நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்த 6 வாரத்துக்கு ஒரு முறை 5,000 பேருக்குப் பயிற்சியளிக்கப்படவிருக்கிறது.

ஜனசவிய நம்பிக்கை நிதியத்திற்கு 3 வருட காலத்திற்கு 400கோடி ரூபாவை உலக வங்கி தருகின்றது-பிரதமர்

24.12.90 வீரகேசரி

மட்டக்களப்பு வாவியிலும், கவுடாதீவுகிரான்குளம் கரையோரங்களிலும் துப்பாக்கிச்சூட்டுக் காயங்களுடன் பல சடலங்கள் கிடப்பதாக அங்கிருந்து தப்பி வருவோர் தெரிவித்துள்ளனர்.

திருகோணமலையில் கொல்லப்பட்ட மேஜர் விஜேரட்னவின் மரணச்சடங்கில் கம்யூனிஸ்ட் கட்சி, சமசமாஜக் கட்சி, மக்கள் கட்சி பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர்.

25.12.90 வீரகேசரி

மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் தாழ்ந்த பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. இடம்பெயர்ந்திருந்த அகதிகளில் பலர் வெள்ளத்திற்குப் பலியாகியுள்ளனர்.

யு.என்.பி.யின் மகாநாட்டில் பங்குபற்றிய தமிழ்க் கட்சிகளின் உரைகளிலிருந்து:

"இன்றைய ஜனதிபதி ஒரு வித்தியாசமான அரசியல் தலைவர். ஏழைகளின் துன்பத்தை அவரும் அனுபவித்தவர். அதன் காரணமாகவே மக்கள் அவர் மீது நம்பிக்கை வைத்திருக்கின்றனர். நாமும் அவர் மீது இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பார் என்று நம்பிக்கை வைத்திருக்கிறோம் -புளொட்

"சொன்ன வார்த்தையைக் காப்பாற்றும் ஒரு உன்னதமான தலைவன் இன்று ஜனதிபதியாக இருக்கிறார். இதுவரை அவர் தமது அரசியல் வாழ்வில் சத்தியத்தை மீறியதில்லை. தமிழினத்தின் நல்வாழ்வு, அபிலாசை ஆகியன பூர்த்தியாகும் பணி அவரின் அரசியல் நடவடிக்கை மூலமே சாத்தியமாகும்"- ஈ.பி.டி.பி

"ஜ.தே.க. மகாநாடு வெற்றியடைய வேண்டும். ஜனதிபதி இனப்பிரச்சினைக்கு ஒரு தகுந்த தீர்வை விரைவில் காண்பார் என நம்புகிறோம். அவரது நடவடிக்கைகளுக்கு கட்சியினர் பூரண ஒத்துழைப்பு நல்க

www.tamilarangam.net

வேண்டும்"—ரெலோ

"ஜனாதிபதியால் மட்டும்மதன் இன்றைய நெருக்கடியைத் தீர்க்க முடியும். அவர் ஒருவர்தான் துன்பத்தின் வேதனை என்னவென்பதைப் புரிந்தவர். கண்ணீரின் ருசி என்னவென்பதைக் கண்டவர். பசியின் கொடுமை என்ன என்பதைப் புரிந்தவர்"—தமிழ்க் காங்கிரஸ்

"இன்றைய வடக்கு, கிழக்குப் பிரச்சினையைத் தீர்க்கக்கூடிய சக்தி ஜனாதிபதிக்கு மட்டுமே உண்டு. இனப் பிரச்சினை ஒரு தேசிய நெருக்கடியாகும். இந்த நெருக்கடி நெருப்பை ஜனாதிபதி அவர்கள் அணைக்க அனைத்துக் கட்சிகளும் அவருக்கு பூரண ஒத்துழைப்பு நல்கவேண்டும்"

. இ. தொ. கா

26.12.90 வீரகேசரி

அக்கரைப்பற்று, பொத்துவில் பகுதியில் வெள்ளத்தால் 30 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் வீடு, வாசல்களை இழந்து அகதிகளாக வெளியேறியுள்ளனர். போக்குவரத்து முற்றுகத் துண்டிக்கப்பட்டுள்ளது.

கொழும்பில் தங்கியுள்ள தமிழ்இளைஞர்கள் பொலிசாரால் தொடர்ந்து கைது செய்யப்பட்டு வருகின்றனர்.

27.12.90 வீரகேசரி

குடாநாட்டில் அத்தியாவசியமான உணவுப் பொருட்களின் தட்டுப்பாடு காரணமாக அன்றுடன் உழைத்து சீவனம் நடத்தும் மக்களும், அகதி முகாம்களில் உள்ளோரும், அரைப்பட்டினி, முழுப் பட்டினியுடனேயே காலத்தையேநட்டுகின்றனர்.

கிழக்குப் பகுதியில் வெள்ளத்தினாலும் பட்டினியினாலும், பாம்பு கடித்தும் பலர் உயிரிழந்துகொண்டிருக்கிறார்கள்

28.01.91 வீரகேசரி

தொடர்ந்தும் நஷ்டத்தில் இயங்குவது, மூலதனப் பற்றுக்குறை போன்ற காரணங்களைக் காட்டி தவச, தினபதி, சிந்தாமணி பத்திரிகைகளை வெளியிடும் சுயாதீன செய்திப்பத்திரிகைகள் நிறுவனம் தனது ஊழியர்களுக்குத் திடீரென வேலைநீக்கக்கடிதங்களை வழங்கியுள்ளதினுல் சுமார் 800 ஊழியர்கள் நடுத் தெருவில் விடப்பட்டுள்ளனர்.

கொழும்பிலிருந்து யாழ் குடாவுக்கு உணவுப் பொருட்களை ஏற்றி வரும் கப்பல்கள் அவற்றை இறக்க முடியாமல் திரும்பிச் சென்றுள்ளதால், உணவுப் பற்றுக்குறை அதிகரித்துள்ளதுடன் இந்தக் கப்பல்கள் மூலம் நடைபெறும் தபாற்சேவையும் ஸ்தம்பித்துள்ளது.

29.01.91 வீரகேசரி

யாழ்குடாநாட்டின் பல்வேறு பகுதிகளில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகளின்போது கைதாகிய மற்றும் காணமற்போன 270 பொது மக்களைத் தேடிக் கண்டுபிடித்துதருமாறு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திடம் உறவினர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

நிபந்தனையற்ற யுத்த நிறுத்தத்திற்குத் தாங்கள் தயார் என்றும், இலங்கை அரசாங்கம் பேச்சுவார்த்தைக்கு அழைத்தால் இதனைக் கரிசனையுடன் பரிசீலனை செய்வோமெனப் புலிகள் கூறியுள்ளனர்.

கிளிநொச்சிப் பகுதியில் வயல்வெளிகளில் வேலைசெய்யும் தொழிலாளர்கள் தொடர்ந்து விமானப்படையினரால் கொல்லப்பட்டுவருகின்றனர்

31.01.91 வீரகேசரி

31.12.90 முதல் தமிழீழ விடுதலைப் புலிப் போராளிகள் இலங்கை ஆயுதப்படைகளுக்கு எதிரான எல்லா ஆயுதப் போராட்டங்களையும் நிறுத்திக் கொள்வர். தமிழீழத்தில் சமாதானமும், வழமை நிலையும் முன்னெடுத்துச் செல்வதை உறுதிபடுத்தும் நல்லெண்ண அறிகுறியாக—வே குறிப்பிட்ட ஒரு வரையறையற்ற காலத்துக்கு போர் நடவடிக்கைகளை நிறுத்துவதென்று தீர்மானித்திருக்கிறோம். யுத்த நிறுத்தத்தைக் கடைப்பிடிப்பது என்ற புலிகளின்ஒருதலைப்பட்சமான இந்த முடிவின் மூலம் எமது மக்களுக்கு எதிரான போரைத் தொடர்ந்து மேற்கொள்ளுவதா அல்லது சமாதான முயற்சியை முன்னெடுத்துச் செல்வதா என்ற முழுப் பொறுப்பையும் இலங்கையரசாங்கத்திடம் இதனுல் ஒப்படைக்கின்றோம். இலங்கையரசாங்கம் இதனை ஸ்திரமான முறையில் ஏற்று இரு தரப்பினராலும் யுத்த நிறுத்தம் கடைப்பிடிக்கப்படுமானுல் சமாதானப் பேச்சுகளில் ஈடுபடுவதற்கு புலிகள் தயாராகவுள்ளனர்—புலிகளின் அறிக்கை

www.tamilarangam.net

தேசநந்தன் (சந்திப்புகள்....
(தொடர்ச்சி)

ஆனால் அதுதான் அப்படி வளர்வதற்கான அடிப்படைக் கட்டம். அது கொஞ்சம் கொஞ்சமாக வளர்ந்து முற்றிய நிலையை அடையும் போது அது முழு மக்களினதும் விரோதியாக மாறிவிடுகிறது. புலிகளிடம் அந்தப் பண்பு வளர்ந்துவருவதையே அவர்களது கடந்த காலச் சம்பவங்கள் காட்டுகின்றன. ஆயினும் இன்னமும் புலிகள் தம்மை திருத்திக் கொள்ள வாய்ப்பு இருக்கிறதா என்று யோசித்துப் பார்க்கிறேன்"

"நீ யோசிக்கிறது இருக்கட்டும். காத்தான்குடிப் படுகொலையும், வடக்கிலிருந்து முஸ்லீம்களை வெளியேற்றியதும் எதைக் காட்டுகிறது? 200க்குமேற்பட்ட பிற இயக்க உறுப்பினர்களைச் சுட்டுச் சாக்காட்டியது எதைக் காட்டுகிறது? வெறும் சனநாயக மறுப்புத்தானா?"

"இந்த மாதிரிச் செயல்களை மற்றைய இயக்கங்களும் செய்யத்தான் செய்யும். பலவற்றை செய்துமிருக்கின்றன. தமிழ் தேசியவாதத்தை தமிழ்இனவாதமாகவும், தமிழ்ப் பேரினவாதப் பயங்கரவாதமாகவும் வளர்த்துவிடுவதில் புலிகளுக்கு மட்டுமல்ல எல்லோருக்கும் பங்குண்டு. பிறருக்கு சனநாயகத்தை மறுப்பதில் இந்த இயக்கங்கள் மட்டும் சளைத்தவைகள் அல்ல. ஆனால் இந்த இயக்கங்களைவிட புலிகள் தம்மைத் திருத்திக்கொள்ள இன்னமும் வாய்ப்பு இருப்பதாக நான் நினைப்பதற்குக் காரணம் அவர்கள் மக்களின் விடுதலையுடன் பிணைக்கப்பட்டுள்ள யுத்தத்தை நடத்துவதில் இன்னமும் ஈடுபடுவதால்தான். ஆனால்..."

"ஆனால்?"

"திருந்த வாய்ப்பு இருக்கிறதே தவிர திருந்துவார்களா என்பது சந்தேகமே! புலிகளின் அரசியல் சந்தர்ப்பவாதம் கலந்த நிலைப்பாடு போராட்டத்தை விடுதலைப்பாதையிலிருந்து திசை திருப்பி எதிரிகட்குச் சாதகமாக்கிவிட்டுள்ளது, அம்பலமாக அம்பலமாக புலிகள் மீதான நம்பிக்கைகளும் தகரத் தொடங்கியுள்ளன. இதனால் புலிகளுமல்லாத, இந்த துரோக இயக்கங்களுமல்லாத ஒரு மூன்றாவது வழியின் அவசியம் உணரப்படத்தொடங்கியுள்ளதென்றே நினைக்கிறேன். இதைத்தான் நான் சமிக்ஞை என்று குறிப்பிட்டேன்"

என்னுடன் வந்த நண்பர் பெருமூச்சுவிட்டார். "அதுக்கு எவ்வளவு காலம் எடுக்கும்" என்படி.

"காலம் எடுப்பது பெரிதல்ல. அந்த மூன்றாவது வழியாவது சரியாக வளர்ந்துவர வேண்டும் என்பதுதான் பெரிதென்று நினைக்கிறேன். இந்த வழி மட்டுமே புலிகளின் மீதான நம்பிக்கையைத் தகர்த்து மக்களுக்கு தம்மீதான நம்பிக்கையை ஏற்படுத்த முடியும். மக்களே புரட்சியை, விடுதலையைச் சாதிக்க

www.tamilarangam.net

முடியும் என உணர்த்தமுடியும்"

"எனக்குச் சிரிப்புத்தான் வருகிறது. பழையபடி மக்களை இதுக்கை இழுக்கிறீங்கள். முதலில் கொக்காவில், பிறகு கோட்டை அதுக்குப் பிறகு மாங்குளம் தாக்குதல் வெற்றிகளால் புலிகள் மீது மேலும் மேலும் மக்களின் நம்பிக்கை கூடப் போகிறதே தவிர குறையப்போறதில்லை! அவர்கள் விடுதலைக்கு வருவதைவிட 2 பவுணுக்குப் பதில் 4 பவுணைக் கொடுத்துவிட்டு புலிகள் மீதே நம்பிக்கை வைப்பார்கள்" என்று முணுமுணுத்தார் என்னுடன் வந்த நண்பர்.

"இவையெல்லாம் வெற்றி என்பது உண்மைதான். இதைத்தான் கொழும்புப் பத்திரிகை ஒன்றில் ஒருவர் இப்போது புலிகள் கெரில்லா யுத்தத்திலிருந்து ஒரு மரபு ரீதியான நிரந்தர இராணுவத்தின் தாக்குதல் புலத்திற்கு மாறியுள்ளார்கள், இது எதிரியைத் தற்காப்பிலிருந்து பின்வாங்கவைக்கும் நடவடிக்கையென்று 'இராணுவ ஆய்வு' செய்திருக்கிறார். ஆனால் இந்தத் தாக்குதல்களின் வெற்றியை பாதுகாக்கவும், அதை மேலும் விரிவுபடுத்தவும் அவர்களால் முடியாது. அது பரந்துபட்ட மக்களின் பங்களிப்புடன் மட்டுமே சாத்தியம். பலமான ஐக்கிய முன்னணி இருப்பின் மட்டுமே சாத்தியம். பலமான மக்கள் குடிப்படைகள் இல்லாவிட்டால் வியட்நாம் தன்னை விடுவித்திருக்க ஒருபோதும் முடிந்திருக்காது. எனவே இவ் வெற்றிகளால் விடுதலைப் போராட்டம் முன்னேறிச் செல்லும் எனக் கருதிவிடமுடியாது. இவை வேண்டுமானால் திரும்பவும் புலியும், அரசும் பேசத் தொடங்க ஒரு காரணமாக அமையலாமே தவிர..."

"அதுதான் லண்டனிலேயே பேச்சு நடப்பதாகச் சொல்லுகிறார்களே?"

"அரசுக்கும் சரி, புலிகளுக்கும் சரி பேசவேண்டிய தேவையிருக்கிறது என்பது உண்மைதான். புலிகள் மாநில ஆட்சி போன்ற ஒரு பெடரல் தீர்வை மையமாக வைத்துப் பேசத் தயார் என்று அறிவித்ததும் உண்மைதான். ஆனால் அரசாங்கம் தனது இராணுவமேலாண்மையை நிறுவியபின்தான் பேச முடியும்என அறிவித்துத்தானிருந்தது. எப்படியோ புலிகளின் பேச்சுவார்த்தையும் சரி, யுத்தமும் சரி, தேசிய விடுதலையைச் சாதிக்கப்போவதில்லை—ஏதாவது அதிசயம் நடந்து புலிகள் மனம் மாறினால் ஒழிய!! இந்திய எதிர்ப்பிலும் சரி, புலி எதிர்ப்பிலும் சரி, விட்டுக்கொடுக்காத தேசியவிடுதலைப் போராட்டத்திலும் சரி உறுதியாக இருந்த பேரவை, என்.எல்.எப்.ரி போன்ற இயக்கங்களையே அழிக்க புலிகள் நினைக்கிறார்கள் என்றால் காரணம் அவர்களது பாதை பற்றி அவர்களிடமே ஒரு தெளிவும் இல்லையென்பதுதான். எல்லா இயக்கமும் தம்மை அழிக்கவே உருவாகின்றன என்ற அச்சமும், பா

www.tamilarangam.net

துகாப்பின்மை உணர்வும்; மக்கள் விரோதச் சிந்தனையாளருக்கும் பாசிசவாதிகட்கும், தமது மனச் சாட்சிக்கே தாம் விரோதமாக நடப்பவர்க்குமே ஏற்படும். இந்த விடுதலை இயக்கங்கள் மிகக் குறைந்தளவே செல்வாக்கு பெற்றனவாயும், யுத்தத்தில் புலிக்கு ஆதரவாக நிலையெடுத்தவையாகவும் இருந்ததுகூட அவர்களுக்குப் பெரிதாக இருக்கவில்லையென்பது அவர்களது அச்சத்தைப் பச்சையாக எடுத்துகாட்டுகிறது. 'மருண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய்' என்பது போல. அதனால்தான் அவர்கள் பல்கலைக்கழகத்தைக் கட்டுப்படுத்துகிறார்கள். புத்திசீவிகளை விரட்டுகிறார்கள். விமர்சனத்தை எதிர்க்கிறார்கள். தாம்எப்போதுமே சரியாக இருந்ததாக, இருப்பதாக நினைக்கிறார்கள். எல்லோரையும், எல்லாவற்றையும் சந்தேகப்படுகிறார்கள். சொந்த அலுவலாக கொழும்பு வர நினைக்கிறவர்களைக்கூடத் தடுக்கிறார்கள். அவர்கள் நம்புவது ஒன்றைத்தான்.."

"அதாவது தங்களைத்தான். அப்பிடியே?"

"இல்லை. தங்களைக்கூட அவர்கள் நம்பவில்லை. நம்புவது ஆயுதங்களை, ஆயுத மூலமாகச் செய்யக்கூடிய பயங்கரவாதத்தை மட்டுந்தான். தங்களை நம்புவது என்பது தங்களது அரசியல் பலத்தை நம்புவது. அப்படி நம்புபவர்கள் சனநாயகத்தை மறுக்கவேண்டிய அவசியம் இல்லை.

ஆனால் இந்த நிலைமையில் இருந்து அவர்கள் இன்னமும் மீளவழியுண்டு.."

"என்ன?!!"

"உள்நாட்டில் சனநாயகத்தையும், ஐக்கியத்தையும் பேணு



www.tamilarangam.net

வது, அதன் மூலம் விட்டுக்கொடுக்காத உறுதியான தேச விடுதலை யுத்தத்திற்கு மக்களைத் தயார் செய்வது.."

"நல்ல கற்பனை தான்" என்றேன் நான்.

"கற்பனையாக இருக்கலாம். ஆனால் அதைவிட வேறுவழியில்லை" என்னுடன் வந்த நண்பர் என்னைப் பார்த்துப் பெருமூச்சுவிட்டார்.

"நீங்கள் மட்டுமல்ல, உங்களைப்போல பலர் இங்கு வந்திருக்கிறார்கள். ஓ. எல், ஏ. எல் சோதினை எடுக்க மறுக்கப்பட்டதால் கொழும்பு வந்து பலர் சோதினை எடுத்தார்கள். திரும்பிப் போகப் பயந்து தவிக்கிறார்கள். வசதியுள்ளவர்கள் புலிகளால் அங்கீகரிக்கப்பட்ட ஐ. சி எம். ஏ, ஐ. ஏ. ஏ., லண்டன் ஏ. எல்., ஓ. எல். என்பன எடுக்கிறார்கள். மற்றவர்கள் என்ன செய்வதென்று தெரியாமல் தவிக்கிறார்கள்." என்று அவரைப்பார்த்துக் கூறினார் நண்பர்.

"ஆனால் இப்ப திரும்பவும் பள்ளிக்கூடங்கள் நடத்தவும், பரீட்சை எழுதவும் புலியள் பெமிசன் குடுத்திட்டாங்களாம். பள்ளிக்கூடங்கள் காலை, மாலை என்று இரண்டு 'செற்'களாக நடக்குதாம்!" என்றேன் நான்.

"நானும் கேள்விப்பட்டேன். இது சனங்களின் எதிர்ப்பின் தன்மையைத் தாங்கமுடியாமல் ஏற்பட்ட ஒரு தற்காலிக விளைவுதான். யாழ்ப்பாணத்தாருக்குப் படிப்பை நிப்பாட்டுறதை சகிக்கமுடியாதென்பது புலியளுக்கு விளங்கியிட்டுது!"

"அப்ப திரும்பவும் இலங்கையரசோட பேச்சுவார்த்தை தொடங்கினாலும் நிலைமை திருந்தாதோ?" என்னுடன் வந்தவர் கேட்டார்.

"பேச்சுவார்த்தை நிலைமையை மாற்றாது. கொஞ்சம் 'றிலீவ்' கிடைக்கக்கூடும்! உண்மையிலை பேச என்ன இருக்குது? அரசு தன்ரை நிலையை கொஞ்சமும் விட்டுக் குடுக்காதவரை பேசுவதில் ஒரு பயனும் இல்லை ஏதாவது பேசுவதென்றால் கொழும்புப் பத்திரிகை ஒன்று எழுதியிருப்பதைப் போல் சுயநிர்ணய உரிமையை அங்கீகரித்துவிட்டு அதை எப்படி நடைமுறைப்படுத்துவது என்று பேச அரசு முன்வரும் பட்சத்தில் பேசலாம். அப்பிடியில்லையென்றால் அதில்எந்த அர்த்தமும் இல்லை.."

"அப்ப 'புலிகளின் சனநாயகம்' இல்லாதவரை தமிழ் மக்களுக்கு விடிவு இல்லைப்போலத் தானே படுகிறது! இந்த மூன்றாவது பாதை எண்டு நீ சொல்லுற விசயம் மட்டும் எப்பிடி செயலுக்கு வரப்போகுது? அதுகும் அப்பிடி ஒண்டு நடக்கப் போகுதெண்டு கேள்விப்பட்ட உடனே-யே நசுக்கப்பட்டிடுமே?"

"நசுக்கிறது பற்றிய விழிப்புணர்வு வேணும். மூன்றாவது - பாதை எல்லாவிதத்திலும் வேறானதாக, பழைய இயக்க முறையி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

விருந்தும் வேருனதாக இருக்க-வேண்டும். ஆனுல் மூன்ருவது பாதையொண்டு வரும் தேவை இருக்கிறது என்று தெரியிற அளவுக்கு அது எப்பிடி இருக்கும் எண்டு இன்னும் தெளிவில்லை! இப்பமலிவா நடக்கிற விமர்சனங்கள் விவாதங்களின்ரை போக்கிலை-தான் அது இன்னும் தெளிவாகவரும் எண்டு நினைக்கிறன்.."

எனக்குத் திரும்பவும் சிரிப்பு வந்தது.

"ஏன் சிரிக்கிருய்?" என்றுகேட்டார் நண்பர்.

"விவாதம் எங்கை நடக்கப்போகுது?யாராவது ஏதாவது சொன்னுலும் அது கிணற்றில் போட்ட கல்லு மாதிரி அப்பிடியே இருக்கும். ஒருதரும் கவனிக்க மாட்டினம். நான் 'தூண்டில்'ல எழுதினது வாசிச்சனி தானே?இதுவரை ஒருதரும் ஒண்டுமே எழுதேலயே?"

"தனியத் தூண்டில் மட்டுமில்லை,எல்லாப் பேப்பரும் ஏதோ எழுதத்தான் செய்யுது. இதை ஒழுங்காக்க முயலவேண்டு-மேயொழிய அவநம்பிக்கைப்படுறதில அர்த்தமில்லை. விவாதம் நடக்காவிட்டாலும் பல கருத்துகள் வருவதே ஒரு நல்ல விசயம்தானே?பொறுத்திருக்கவேண்டியதுதான். இதைவிட வேறு வழிய ளையும் விவாதிக்க ஒழுங்குசெய்யிறதும் நல்லது.."

பிறகு மூவரும் நீண்டநேரம் பேசிக்கொண்டிருந்தோம். என்னுடன் வந்த நண்பருக்கு ஊருக்குப் போவது பற்றிய தனதுமுடிவை உறுதிசெய்துகொள்ள முடியவில்லை. எதற்கும் சனவரி 15 ஆம் திகதிவரை இருந்தபின் என்ன நடக்கிறது என்று பார்த்து முடிவுசெய்வோம் என்று தீர்மானித்துக்கொண்டார்.

"ஏன் ஒருவேளை அதுக்கிடையில தமிழீழம் வந்திடும் எண்டு நினைக்கிறீரோ?" என்றேன் நான்.

"இல்லை. 'புலிகளின் தாகம்' தணியுமோ என்றுதான்" என இழுத்தார் நண்பர்.

---

## ஒரு கொலை!

கலம் 36இல் வெளியாகிய "புறநானூறு" என்ற எனது கவிதையின் கடைசி வரிகள் "மக்களால் செய்யப்படவேண்டியது.... என ஓங்கிக் கத்தினேன்" என்றிருப்பதற்குப் பதிலாக "....என ஏங்கிக் கத்தினேன்" என்றுள்ளது. எனது எழுத்து விளங்கவில்-லையோ அல்லது நீங்கள் வழக்கமாக விடும் எழுத்துப்பிழையா எதுவாயினும் கவிதையைச் சாகடித்துவிட்டீர்கள்.

இரா. சத்தியன்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஐக்கிய இலங்கை சாத்தியமா?

இலங்கையில் இன்று தமிழ் மக்கள் தம் வரலாற்றில் சந்தித்திராத ஒரு நீண்டதும், நெடியதும் துன்பங்களைத் தரக்கூடியதுமான யுத்த சூழ்நிலைமையில் பதுங்கு குழிக்குள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். எதிர் நாடு ஒன்றின்மீது தொடுக்கப்படும் யுத்தமொன்றிற்கு எந்த வகையிலும் குறைவில்லாததும் சகல வழிகளிலும் - ஆகாய, கடல், தரைமார்க்கமென்று மும்முனைகளிலும் இருந்து இந்த யுத்தத்தை - அதாவது தமிழ் மக்கள் மீதான இன அழிப்பை சிறிலங்கா இனவெறி அரசு மேற்கொண்டு வருகிறது.

புலிகளை அழித்தொழிக்கும் நடவடிக்கை எனக் கூறிக்கொண்டு அப்பாவித் தமிழ் மக்கள்மீது விமான ஹெலிகுண்டுத் தாக்குதல்கள் தொடர்கின்றன. ஆஸ்பத்திரிகள், பாடசாலைகள், அகதி முகாம்கள் மீதான தாக்குதல்கள், அப்பாவி மக்கள் மீதான உணவு மற்றும் பொருளாதாரத் தடை, சுகாதார மருந்துப் பொருட்கள் தடை என அரச பயங்கரவாதம் தொடர்கின்றது.

அரசின் கணக்குப்படியே இதுவரையுள்ள 700 அகதி முகாம்களில் 10 இலட்சத்திற்கும் அதிகமான மக்கள் அகதிகளாக இன்று தமது வாழ்வுக்கான ஜீவமரணப் போராட்டத்தை நடத்திக் கொண்டிருக்கிறார்கள்.

சிங்கள, முஸ்லிம் மக்கள்மீது புலிகளால் நடத்தப்படும் தாக்குதல்கள் ஏற்கனவே புலிகளால் மேற்கொள்ளப்பட்ட அநுராதபுரப் படுகொலைகளை, அண்மையில் புத்தளத்தில் நடைபெற்ற அப்பாவிச் சிங்கள மக்கள் மீதான தாக்குதல், காத்தான்குடியில் முஸ்லிம் மக்களைப் படுகொலை செய்தவை போன்றவை புலிகளின் முன்யோசனையற்ற இன ஐக்கியத்திற்கு எதிரான வெறும் குறுந்தேசியவாத அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட இயலாமையின் விளைவுகள். இவற்றை நாம் கண்டிக்கின்றோம்.

அப்பாவி மக்கள் மீது மேற்கொள்ளப்படும் தாக்குதல்களை, அவர்கள் எந்த இன மக்களாக இருந்தாலும் அவற்றை யாராலும் எந்தக் காரணத்தைக் கொண்டும் நியாயப் படுத்த முடியாது.

இன்று தமிழ் மக்களுக்கும் சிறிலங்கா பேரினவாத அரசுக்குமிடையில் பிரதான முரண்பாடு நிலவும் ஏக காலத்திலேயே, தமிழ் மக்களுக்கும் முஸ்லிம் மக்களுக்கும் இடையிலான முரண்பாடும் கூர்மையடைந்து கொண்டு வருகிறது. இத்தகைய சூழ்நிலையில் இனங்களுக்கிடையில் ஐக்கியம், சமாதானம், சமத்துவம்...., போன்ற கோசங்கள் முன்வைக்கப் படும்போது அது சாத்தியமா என்றும், போராடும் பல்வேறு குழுக்களால் முன்வைக்கப்படும் தீர்வுகளான தமிழ்ஈழம், ஐக்கிய இலங்கைப் புரட்சி, இப்போதுள்ள அரசமைப்புக்குள்ளேயே இனப்பிரச்சனைக்கான தீர்வு போன்ற நிலைப்பாடுகளில் எது சரியானது, எது நடைமுறையில் ஏற்கக்கூடியது, எது சாத்தியமானது என்று பல்வேறு கேள்விகள் எழுவது தவிர்க்க முடியாததாகின்றது.

பேரினவாத சிறிலங்கா அரசு சிறுபான்மைத் தேசிய இனமான தமிழ் மக்களின் உரிமைகளை நசுக்கத் தொடங்கியபோது அதற்கெதிராக தமிழ்

www.tamilarangam.net

மக்கள் தங்கள் உரிமைகளைக் காப்பதற்கான போராட்டங்களைத் தொடங்கியது நியாயமானதே. ஆனால் தமிழ் மக்களின் நியாயமான போராட்டங்களின் தன்மைகளை சிங்கள மக்கள் சரிவரப் புரிந்து கொள்ள முடியாத வகையில் அரசு இனவாதத்தை அரங்கேற்றியதில் 58, 77, 83,... என்று அவ்வப்போது இனக்கலவரங்களாக இனவெறி கொழுந்துவிட்டு எரிந்தது.

அதே சமயம் தமிழ் மக்களின் போராட்டங்களுக்குத் தலைமை கொடுத்தவர்களும் போராட்டங்களை முன்னெடுத்துச் செல்வதற்கு எந்தவொரு திட்டமுமில்லாது 'தமிழ் ஈழம்'தான் தீர்வு என்று மேடைகளில் முழங்கி குறுந் தேசிய வாதத்தை வளர்த்து கிடைத்த வோட்டுக்களில் பாராளுமன்றம் சென்று தம்மை யாரென்று இனம் காட்டினர்.

சிங்கள மக்களுக்கும் தமிழ் மக்களுக்கும் இடையில் இனவாதப் போக்குகள் பெரிதாக வளர்ச்சியடையாத ஆரம்ப காலங்களிலேயே இத் தலைவர்கள் 'தமிழ் ஈழம்' என்ற கோரிக்கையை முன் வைத்ததானது, தமிழ்த் தலைவர்களது விளக்கமின்மையாலும் சிங்கள அரசியல் வாதிகளின் தவறான விளக்கங்களாலும் சிங்கள மக்கள் மத்தியில் தமிழ் மக்களின் உரிமைகளிற்கான போராட்டத்திற்கான தார்மீக ஆதரவை இழக்கச் செய்தது மட்டுமல்லாமல் இனவெறிச் சக்திகளின் பின்னால் சிங்கள மக்கள் அணிதிரள வாய்ப்பையும் அளித்தது.

இலங்கை அரசினால் பலவந்தமாக மேற்கொள்ளப்படும் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள், தமிழ் மக்கள் தாம் வாழ்ந்து வந்த பாரம்பரியப் பிரதேசங்களில் இருந்து விரட்டியடிக்கப்படல், மேலும் வடக்கு கிழக்கு இணைந்த மாகாண சபையை அங்கீகரிக்கத் தயார் என்று அறிக்கைகள் விட்டுக்கொண்டே மறுபுறம் வட, கிழக்கு மாகாணங்களை இணைக்கும் மையப் பிரதேசங்களிலான சிங்களக் குடியேற்றங்கள், தமிழ் மக்கள் வாழ்ந்த பிரதேசங்களின் தமிழ்ப் பெயர்கள் மாற்றப்பட்டு சிங்களப் பெயர்கள் சூட்டப்படுவது, (உ-ம்: அண்மையில் வவுனியா என்பது கஜபாகுபுர எனப் பெயர் சூட்டப் பட்டது) போன்ற நிகழ்வுகள் எல்லாம் இனங்களுக்கிடையில் பரஸ்பரம் மோதல்களும், சந்தேகமும், புரிந்துணர்வும் அற்ற நிலையில் மேலும் மேலும் விரிசல்களையே உண்டு பண்ணும்.

இத்தகையதோர் சூழலில் தமிழ் மக்கள் தம் பாரம்பரியப் பிரதேசங்களில் தமது பாதுகாப்புக்காக போராடுவதைவிட வேறுவழி இருக்க முடியாது. இதை வெறும் தமிழீழப் போராட்டம் என்று குறுக்கிவிட முடியாது.

## மனிதம் குழு

இன்று தமிழ் மக்களின் போராட்டத்திற்கு தமிழ் ஈழம்தான் தீர்வு என்று கூறுவது சரியா, தவறா என்பது விவாதத்திற்குரியதாக இருப்பினும் தமிழ் மக்கள் தங்கள் பராம்பரியப் பிரதேசங்களின் பாதுகாப்புக்காகப் போராடுவதை யாரும் குறுந்தேசிய வாதப் போராட்டமென்றோ இன ஐக்கியத்திற்கு எதிரானது என்றோ கூறிவிட முடியாது.

இதுவரை இலங்கையில் முஸ்லிம் மக்களும் தமிழ்பேருகின்ற காரணத்தால் தமிழ்த்தேசிய இனத்திற்குள் அடங்குவர் என்பதும், தமிழ் மக்களின் பிரச்சனைக்கு முன்வைக்கப்படும் தீர்வு அவர்களையும் உள்ளடக்கியது என்றும் கூறியது பழைய வரலாறாகப் போய்விட்டது. முஸ்லிம் மக்களுக்கும் தமிழ் மக்களுக்கு மிடையிலான முரண்பாடுகள் முஸ்லிம் அடிப்படை வாதிகளாலும், தமிழ்க்

www.tamilarangam.net

குறுந்தேசிய வாதிகளாலும் வளர்த்தெடுக்கப்பட்டு பரஸ்பரம் ஒருவரை ஒருவர் தேடி அழிக்கும் நிலைக்கு வளர்ந்துள்ளது.

அண்மைய கசப்பான சம்பவங்கள் இதற்குச் சாட்சியாக உள்ளன. வடக்கிலிருந்தும் முஸ்லிம்கள் தமது இருப்பிடங்களைவிட்டு வெளியேற்றப் படுகிறார்கள். எதிர் காலத்தில் தமிழர்களும் முஸ்லிம்களும் இணைந்த தீர்வு அல்லது வட-கிழக்கு இணைந்த பிரதேசம் என்ற கோரிக்கைகள் எல்லாம் கேள்விக் குறியாய்ப் போய் உள்ளன.

இன்று வடக்கு, கிழக்கில் இருந்து 'யுத்தத்'தின் கொடுமைகள் தாங்க முடியாது அன்றாடம் ஆயிரக்கணக்கில் மக்கள் வெளியேறிக் கொண்டிருக்கிறார்கள். இப்போது நடைபெறும் யுத்தத்தினால் வெறும் அழிவைத்தவிர ஒரு விடிவு கிடைக்கும் என்ற நம்பிக்கையை அவர்கள் இழந்துள்ளனர். எந்தச் சிங்கள மக்களால் தமது பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படும் என்று கருதினார்களோ, இன்று நடைபெறும் யுத்தக் கொடுமை காரணமாக அதே சிங்கள மக்கள் மத்தியில் பாதுகாப்பாய் வாழ்வதற்கு உத்தரவாதமளிக்கப் படுமானால் வாழவும் தயாராக உள்ளார்கள்.

ஆனால் சிறி லங்கா அரசோ இன்று தான் தொடுத்துள்ள யுத்தம் ஒரு புனித யுத்தமென்றும் 'புலி'களை அழித்தொழிப்பதற்கான நடவடிக்கை என்றும், இந்தப் புனித யுத்தத்தில் சிங்கள மக்கள் அனைவரும் தமது பங்களிப்புக்களை செய்யவேண்டும் என்றும் இனப்வெறிப் பிரச்சாரம் மேற்கொண்டு தேசிய பாதுகாப்பு நிதி என்று மக்களிடம் நிதி வசூலித்தும், யுத்தத்தில் பங்குகொள்ள சிங்கள இளைஞர்களை அணிதிரட்டியும் வருகிறது.

இந்த அரசு தன்னைத் தற்காத்துக் கொள்ள இனவெறியைக் கையிலெடுப்பதைத் தவிர வேறு வழியில்லை. ஏனெனில் இலங்கையில் பொருளாதார நெருக்கடி, அந்நியக் கடன் சுமை, அநியாயமான யுத்தம் ஆகியவற்றால் சராசரி மக்கள் தம் அன்றாட வாழ்க்கையை ஓட்டமுடியாத அவல நிலைக்கு ஆளாகியுள்ளார்கள். இதனால் எழும் மக்களின் கோபாவேசத்தில் இருந்து தம்மைப் பாதுகாக்க இந்த அரசுக்கு இனவெறியை ஊட்டி வளர்த்து இலங்கையில் உள்ள சிறுபான்மை இனங்களை சிங்கள மக்களின் எதிரிகளாக நிறுத்துவதைவிட வேறு வழியில்லை.

இந்நிலை மாற்றமடைய வேண்டுமாயின் சிங்கள மக்கள் மத்தியில் நிலவுகின்ற தேசிய வெறியையும், தமிழ் மக்கள் மத்தியில் நிலவும் குறுந்தேசிய வெறியையும் முஸ்லிம் அடிப்படை வாதங்களையும் எதிர்க்கின்ற புரட்சிகர சக்திகளின் செயற்பாடுகள் முனைப்படைய வேண்டும்.

இலங்கையில் வாழும் சிறுபான்மை இனமக்கள் மாற்று இன மக்களால் பாதிப்பக்குள்ளாக மாட்டார்கள் என்பதற்கு உத்தரவாதம் வழங்கப்பட வேண்டும்.

தமிழ் மக்கள் தங்கள் பாரம்பரிய பிரதேசங்களில் பாதுகாப்புக்காகப் போராடுவது நியாயமானது என்பதைச் சிங்கள மக்கள் ஏற்கவேண்டும்.

தமிழ் மக்களால் முன்வைக்கப்படும் தேசிய வேலைத் திட்டம் இலங்கைப் புரட்சிக்கான பொது வேலைத் திட்டத்திற்கு முரணாக இருக்கக் கூடாது. அதே சமயம் பொது வேலைத் திட்டத்தின் அடிப்படையில் மட்டும் நின்றுகொண்டு தேசிய வேலைத் திட்டத்தை அங்கீகரிக்காமல் விடுவது ஏற்கக்கூடியதல்ல.

முஸ்லிம் மக்களின் பிரச்சனைகளைத் தனியே தமிழ் மக்களின் பிரச்சனையாகப் பார்த்து குறுக்கிவிட முடியாது. முஸ்லிம் மக்களின் தனித்துவம் அவர்களின் வரலாற்றுப் பின்னணி, கலாச்சாரம் போன்றவை பற்றிய சரியான கணிப்பீடுகளின் மூலம் அவர்களும் ஏற்கக்

www.tamilarangam.net

கூடியதான தீர்வுபற்றி முடிவுகளுக்கு வர முயற்சிக்கவேண்டும். இது பற்றிய தெளிவான அறிவு எம்மிடம் இல்லையென்றே கூறலாம்.

மலையக மக்களைப் பொறுத்தவரை அவர்கள் ஒரு தேசிய இனமா இல்லையா என்கிற வாதங்கள் ஒருபுறம் இருக்க, இலங்கையில் பிறந்த சகல மலையக மக்களுக்கும் இலங்கைப் பிரசாவுரிமை கிடைக்கவேண்டும். மலையக மக்களுக்கு மலையகமே பாரம்பரிய பிரதேசம். அதைவிட்டு அவர்களை வெளியேற்றுவது, நீண்ட காலங்களுக்கு முன்பாக இந்தியாவில் இருந்து வந்தவர்கள் என்பதற்காக நாடு கடத்துவது என்பவை கண்டிக்கப் படவேண்யவை.

மலையக மக்களும் தங்கள் தேசியத்தைக் காப்பாற்ற புரட்சிகர சக்திகள் ஊக்குவிக்க வேண்டும். அதன் அர்த்தம் முன்னர் தமிழ்ப் போராட்டக் குழுக்கள் கருதியது போல தலைமை கொடுப்பதல்ல. அவர்களைப் பற்றியும் சரியான ஆய்வுகள் முன்வைக்கப்பட வேண்டுமாதலால் உடனடியாக ஒரு முடிவுக்கும் வரமுடியாது.

தமிழ் மக்களின் 'சுயநிர்ணய உரிமை' அங்கீகரிக்கப் படவேண்டும். இது பல இடதுசாரிக் கட்சிகளும், சர்வதேசிய வாதிகளும், போராட்டக் குழுக்களும் கூறி வந்தது போல வெறும் கோசங்கள் என்ற அடிப்படையில் இல்லாமல் உண்மையில் தமிழ் மக்களில் பெரும் பான்மையினர் பிரிந்து போக விரும்பினால் அதை அங்கீகரிக்கக் கூடியவர்களாக இருக்க வேண்டும். அதாவது பிரிந்து போவதை எதிர்த்து புரட்சியாளர்கள் தமிழ் மக்கள் மத்தியில் பிரச்சாரம் மேற்கொள்ளும் அதே சமயம் பெரும்பான்மையினரின் விருப்புக்கு மாறாக பலவந்தமான இணைப்புக்கு ஆதரவளிக்கக் கூடாது என்பதே. ஏனெனில் தேசிய இனங்களின் பிரச்சனைகள் தீர்க்கப் பட்டதாக இதுவரை உதாரணம் காட்டப்பட்ட சோவியத் ரசியாவில் சரியான முறையில் 'சுயநிர்ணய உரிமை' அடிப்படையில் தீர்க்கப் பட்டதா? வெற்றியளித்துள்ளதா? பெரும்பான்மையினரின் விருப்புக்கு மாறான பலவந்த இணைப்பா? என்ற கேள்விகள் எழுந்துள்ளன.

முதலாளித்துவ அமைப்புக்குள் தேசிய இனப் பிரச்சனைகளுக்கு குறைந்த பட்சத் தீர்வுகளையாவது செய்து கொண்டுள்ள சுவிஸ், கனடிய அனுபவங்களும் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும்.

இலங்கையில் ஏனைய இன மக்களைவிட தமிழ் மக்களே இராணுவ ரீதியில் ஒடுக்கு முறையை நாளாந்தம் எதிர் கொண்டுள்ளார்கள். அதைத் தீர்க்கின்ற விதத்தில் முன்வைக்கப்படும் தீர்வுகளாலேயே ஐக்கிய இலங்கை என்பது விரும்பப் படும் ஒன்றாய் தமிழ் மக்களுக்கு இருக்க முடியும்.

---

இக் கலம் தாமதமாகப் புறப்பட்டதற்குக் காரணம் எதிர் பார்த்திருந்த ஆக்கங்களை „தபால் அலுவலகம்" தாமதமாகத் தந்தமையாகும்!

கடலோடிகள்

---

www.tamilarangam.net

தூண்டில் நடுநிலைமையான விமர்சனம் என்ற நிலையைத் தாண்டி தனியே புலி எதிர்ப்பு வாதமாக மட்டும் வெளிவரத் தொடங்கியுள்ளது. ரெலோ தமிழ்ப் பெண்கள் பலரைக் கொன்று கடலில் போடுகின்றது. முன்னர் புளொட் தனது உறுப்பினர்களையே கொன்று தாட்டதுமாதிரி இப்போது ரெலோவும்செய்கிறது. கத்தக் கத்த வீதியால் இழுத்துக்கொண்டுபோய் கடலில் ஆட்களை எறிவது உங்களுக்குத் தெரியவரவில்லையா? இதைப் பற்றி மூச்சுவிடாமல் புலிகள் என்ன செய்தாலும் தூக்கிப் பிடியுங்கள். தனியே புலிகளை மட்டும் விமர்சிப்பதால் என்ன சாதிக்கப் போகிறீர்கள்?

ஒவ்வொன்றிலும் காலம் தேவை, எல்லை, வளர்ச்சியான விமர்சனப் போக்கு இருக்கும். ஆனால் தூண்டிலைத் தூக்கினால் ஒரே புலிதான். கொஞ்சக் காலத்துக்கு புலி எதிர்ப்பு வாதத்தைத் தள்ளி வையுங்கள். இந்தியாவில், இலங்கையில் அகதிமுகாம்களில் சனங்கள் எவ்வளவோ கஷ்டப் படுகிறார்கள். அதைப்பற்றி எழுதலாம். புலம் பெயர்ந்த தமிழ்ச் சமூகத்தின் பிரச்சினைகள்.. இப்படி எத்தனையோ இருக்கிறது. எழுதினால் புலி. இல்லையென்றால் ஒன்றுமில்லை.

புலி, புலி என்று விமர்சிக்கிறீர்கள். அதை உருவாக்கியது எங்கள் மக்களின் ஒரு பகுதிதானே. புலியை அழிப்பதால் சாவது தமிழ்ச் சனம்தான்.

தப்பியோடி கொழும்புக்கும், வெளிநாடுகளுக்கும் வந்தபின் அமைதியாக, கஷ்டமில்லாமல் இருந்துகொண்டு விமர்சிக்கிறதுக்கு உங்களுக்கு என்ன தகுதி இருக்கிறது? புலிகள் செய்துகொண்டிருப்பதை செய்ய இயலாமல் அவர்களின் சகிப்புத் தன்மையில் தூசிகூட இல்லாமல் தானே ஓடிவந்தீர்கள்.

# புலி எதிர்ப்புவாதம் மட்டுமே!

www.tamilarangam.net

இப்போது இருக்கும் நிலைமையில் பின்வாங்குதல் என்றால் இவ்வளவு இழப்புகளுக்கும் அர்த்தமில்லாமல் போய்விடும். அவர்களுக்கு வேறு வழியில்லை.

மக்கள் சாகிறார்கள், போராட்டம் திணிக்கப்படுகிறது என்று சொல்வது யார்? தப்பியோடி வந்தவர்களும், பாதுகாப்பாக இருப்பவர்களும்தான்.

பந்து விளையாடும்போது பார்த்துக்கொண்டிருப்பவர்கள் சொல்லலாம் அப்படி அடித்திருக்கலாம். இப்படி அடித்திருக்கலாம் என்று. மைதானத்தில் நீங்கள் நிற்கும்போதுதான் உண்மை நிலை தெரியும். இனியாவது — யோசித்துப் பாருங்கள்.

வ. அருணா

---

# சாண்டிலின் போக்குப் பற்றிய விவாதத்தொடர் - - -

வெளிநாடு சென்றோர் எல்லோரும் துரோகிகள் என்ற கருத்து எழுந்த சமூகத்திலிருந்து அக்கிரமங்களுக்கு எதிராக வெளிநாடுகளில் எழும் மனிதத்துவத்தின் குரல்வளையை நெரிப்பதில் இங்கு மிளகாய்த்தூளும், கையுமாக உழைத்துவரும் 'தேசிய வீரர்களின்' அரசியல், உளவியல் நடவடிக்கைகளுக்கு முகங்கொடுத்து ஓர் விவாதத்தில் பங்குகொள்வது மிகவும் பிரயோசனமானதும், அவசரமானதுமாகும்.

1983இற்குப் பின்னர்கூட அல்ல, கடந்த 1 வருடமாகத்—தான் இத்'தேசியத் தலைமை' பற்றிய விவாதம் மேற்குலகில் எழுந்திருக்கிறது. இந்த (வி)—தேசியத் தலைமைகளை நிராகரித்து எழுந்த பரந்துபட்ட ஓர் சமூக இயக்கத்தின் மீது சேறடிப்புகளை நாகரிகமாக மேற்கொண்டுவரும் "புதிய சமயக்குரவர்கள்" கையில் தாளமும், "துதிக்கப்படுவது நீறு" என மேற்கோள்களும் வைத்துக்கொண்டு கால் நோகாமல் நடந்து திரியும் குழந்தைத்தனம் மீது அல்லது இவர்களின் "பக்தி இயக்கத்தின்" மறுமலர்ச்சியின் மீது கவனம் செலுத்துவது அவசியமானதாகும்.

மேற்கு நாடுகளில் பரவலாகக் கட்டியமைக்கப்பட்ட புலிகளின் வலைப்பின்னல் பிரச்சார அமைப்புகளின் மேற்குநாட்டு சாதனங்கள் (14 தொலைபே

www.tamilarangam.net

சி இணைப்பு வரைக்கும்!) மற்றும் புலிகளின் தீவிர கண்காணிப்பில் இருந்துவரும் தமிழ்ப் பத்திரிகைகளும் சமீப காலகட்டங்களில் தேசியத் தலைமையாகப் புலிகளைப் பிரகடனப்படுத்துவதில் உழைத்துள்ளன.

இன்னும் இக் கருத்து மாயைக்குப் பலியாக்கப்பட்டோ அல்லது "தேசியம்", "தமிழீழம்" என்ற அற்புதமான "கந்தர்வ-லோகத்தில் முடியுடன் தாங்கள் ஆகாயத்தில் பறந்து திரியப் போவதான" நினைப்பிலோ அகதிகளை அதிகாலைத் தூக்கத்தில் எழுப்பி மாதச் சம்பளங்க-ளை அபகரித்துப்போகும் டெனிம், கண்ணாடி வகையறுக்கள் விதைக்கும் தேசியவாதமும் இவ்விடத்தில் கவனிக்கவேண்டியதொன்றாகும்.

இதற்குச் சற்று மாறுபட்டு புலிகளின் தலைமை எங்கு மேதின ஊர்வலங்கள் நடந்தாலும் தன்னை லெனின் படத்துடன் இணைத்துக்கொண்டு செல்லும்படி 57 வெளிநாட்டு புலிகளின் தூதுவராலயங்களுக்கும் ஆணை பிறப்பித்துள்ளது.

இப்போதுள்ள இரண்டாவது பரம்பரையான "ஆழ்வார்ப் பரம்பரை" என்ன சொல்கிறது? இங்கு சிலரைக் கேட்டுப் பாருங்கள் (பிரான்ஸில்):

"புலிகள் பாஸிஸ சக்திகள் அல்ல, தேசிய சக்திகள். புலிகளின் தேசியத் தலைமையை ஆதரிக்காவிடில் என்னென்று — கோமிங்டாங்குடன் மாவோவின் தந்திரோபாயத்தை ஏற்றுக் — கொள்வீர்கள்".

நான் இந்திய ஆக்கிரமிப் பின்போது வெளிவந்த புலிகளின் பத்திரிகையைப் புரட்டினேன்.

"ஜப்பானுக்கு எதிராக கோமிங்டாங்குடன் மாவோவின் தந்திரோபாயத்தைப் போலவே இலங்கை அரசுடன் ஐக்கியபட்டு இந்தியாவை முறியடிப் — போம்"

தந்திரோபாயங்கள் வாழ்க! சனங்கள் சாகமுதல் இவர்கள் சனங்களுக்கும் இந்த தந்திரோபாயங்களை முன்கூட்டியே தெரியப்படுத்தினால் நல்லது.

ஏற்கெனவே எனக்கு எழுத்துகளினூடு அறிமுகமான 'கவிஞர்' ஒருவரை சமீபத்தில் நேரில் சந்தித்தேன். 4 வருடங்களுக்கு முன் இயக்கங்களைப் பாசிசவாதிகளாகக் கண்ட அவர் இப்போது தேசிய சக்திகளாக காண்கிறார். இதற்குரிய காரணம் தான் என்ன? 'ஏதாவதொன்றை ஆதரித்துத் தீரவேண்டிய புத்திசாலி மனோபாவம்தான்'.

புலிகள் நடத்திய பள்ளிவாசல் படுகொலைகள், யாழ்ப்பாணம், மன்னார் பகுதிகளிலிருந்து முஸ்லீம்களை வெளியேற்றியமை எல்லாம் நடந்தபின்னர் கூட அவர் இந்த நிலைப்பாட்டில்தானிருக்கிறார். இந்த நிலைப்பாட்-டைவிட இன்னும் பல போக்குகள் வெளிநாடுகளில் உலாவருகின்றன. அவையாவன:

www.tamilarangam.net

1. புலிகள் பலம் வாய்ந்த இயக்கம். இந்த நேரத்தில் அதனை எதிர்க்கமுடியாது.

2. புலிகள்த்தான் போராடிக் - கொண்டிருக்கிறார்கள். அவர்களை இந்த நேரத்தில் விமர்சித்துப் பலவீனப்படுத்தக்கூடாது.

3. மக்கள் புலிகளுடன் நிற்கிறார்கள். எதிர்த்தால் நாம் அந்நியப்பட்டுவிடுவோம்.

ஐரோப்பா எங்கும் மற்றும் கனடாவிலும் இப் போக்குகள் பரவலாக உள்ளன. சஞ்சிகைகளிற்குள்ளும் புலிகள் பாசிச சக்திகளா? தேசிய சக்திகளா? என்ற விவாதங்கள் தொடர்ந்து நடைபெற்றுவருகின்றன.

பிரேதங்களை அகற்றுவதற்குப் பதில் அதற்கு மலர் தூவும் 'இயக்கம்' தொடர்ந்து கொண்டிருக்கிறது.

'தப்பி' வந்துவிட்டோமென்ற குற்றவுணர்ச்சியினால் உந்தப்படுவதும், அது எதிர்கால சமூகத்தைப் பற்றிய எமது பொறுப்புணர்வின் மீது ஆதிக்கம் செலுத்துவதும் தொடர்ந்து நிகழ்கிறது.

(வி) தேசியத் தலைமைகள் அத்தனையையும் நிராகரித்து எழும் பரந்துபட்ட ஓர் சமூக இயக்கத்தின் முன் தேசியத்தலைமையாக ஓர் பாசிச இயக்கத்திற்கு முற்போக்குச் சாயமடிக்கும் 'வெளிநாட்டு' வேலைத்திட்டங்கள் ஒழிக!

"இனவாதப் பொய்களையும், அரை உண்மைகளையும் நம்பிப் பழகிவிட்ட மனங்களை தெளியவைக்கவேண்டிய கடமை எம் முன் உள்ளது" என்ற இமயவரம்பனின் கருத்து இன்று ஆழ்ந்து சிந்திக்கவேண்டிய ஒன்று.

சுகன்

---

# தூண்டிலிடம் என்ன திட்டம் இருக்கிறது?

கலம் 34இல் வெளிவந்த "தூண்டிலின் போக்கு" என்ற தூண்டில் மீது வைக்கப்பட்டிருக்கின்ற விமர்சனக் குறிப்புகளும், அவ் விமர்சனத்தைத் 'தூண்டில்' ஆராய முற்பட்டிருப்பதும், கருத்து விவாதங்களூடாக 'தூண்டில்' ஒரு புதிய, சரியான நிலையை அடைய முற்பட்டிருப்பது என்பதும் மிகவும் வரவேற்கத்தக்க ஓர் அம்சமாகும். இந்த மனோபாவ-மானது தூண்டிலை ஓர் அரசியல் சஞ்சிகை என்ற நிலைக்கு வளர்த்தெடுக்கும் சாத்தியப்பாடு

www.tamilarangam.net

கள் உள்ளன என்ற நம்பிக்கையைத் தருகிறது.

இன்றைக்கு இலங்கையின் அரசியல் களத்திற்கு அப்பால் எமது தேசத்தின் அரசியல் பிரச்சினைகள் தொடர்பான பல பத்திரிகைகளுள் கோடிட்டுக்காட்டக்கூடிய, கணிசமான பங்கை தூண்டில் வகிக்கின்றது. ஆனால் ஓர் அரசியல் பத்திரிகைக்கு இருக்கவேண்டிய பண்புகள், நமதுதேசத்தின் விடுதலைக்கான தேவைகள் என்பன முற்றாக நிறைவு செய்யப்படாத நிலையிலேயே தூண்டில் வெளிவருகிறது.

ஓர் அரசியற் பத்திரிகை என்பது மிகச் சிறந்த ஸ்தாபகன் என்பார்கள். போராட்டக் களத்திற்கு வெளியே இந்த ஸ்தாபனப்படுத்தும் பணி என்பது எவ்வளவு சாத்தியம் என்பதுகேள்விக்குரிய பிரச்சினை என்றாலும் ஒரு கருத்தை அமைப்பாக்குகின்ற பணியையாவது இது போன்ற பத்திரிகைகளினால் குறைந்த பட்சமாவது செய்யமுடியும்.

ஓர் அரசியற் பத்திரிகை அரசியல் சக்திகள் மீது ஏற்படுத்திய தாக்கம், ஓர் இலக்கிய பத்திரிகை வெகுஜனங்கள் மீது ஏற்படுத்திய தாக்கம் என்பன போராட்டங்களின் தீர்மானகரமான காரணிகளாகப் பல சந்தர்ப்பங்களில் அமைந்திருக்கின்றன.

கலம் 34இல் புத்தி ஜீவிகள் தொடர்பான நிலையும், அதன் ஊடாக அவர்கள் மத்தியிலிருந்து எழுந்துள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ள 3 விதமான சிந்தனைப்போக்குகளும் யதார்த்தமானவை. ஆதியிலிருந்து ஆராயப்பட்ட தூண்டிலின் போக்கும் அதன் இன்றைய நிலை தொடர்பான விடயங்களும் ஏற்றுக்கொள்ளக்கூடியவை. இந்த நிலைக்கான தீர்வு என்ன என்பது தான் எம்முன்னுள்ள பிரச்சினையாகும்.

தமிழீழத்திற்கான தேச விடுதலைப் போராட்டம் என்பது ஆரம்பத்திலிருந்தே எந்த வித திட்டமும் இல்லாத, கொள்கையற்ற ஒரு யுத்தமாகவே இருந்து வந்தது. இன்றைக்கு நமது தேசம் எதிர்நோக்குகின்ற 2 விதமான பிரச்சினைகள் பொதுவாக இயக்கங்களிடமிருந்தும், சிறிலங்கா அரசிடமிருந்தும் தான்வெளிப்படுகின்றன.

இயக்கங்களா, அரசாங்கமா எமது எதிரி என்று திகைக்கின்ற அளவுக்கு எமது போராட்டம் சீரழிக்கப்பட்டுவிட்டது. எமது தேசத்தைப் பொறுத்தவரை இயக்கங்களும், அரசாங்கமும் மக்களை அடக்குகின்ற "பணிகளைப்" போட்டிபோட்டபடிசெய்துமுடிக்கின்றன. இரண்டு பக்கத் துப்பாக்கிகளுக்கு நடுவே மக்கள் திகைக்கிறார்கள். இந்தநிலையில் எமது போராட்டத்தைச் சீர்குலைக்கின்ற, தேசவிடுதலை சம்பந்தமான திசைவழியைத்தீர்மானிக்கமுடியாமல் ஜனநாயகத்தை மழுக்கின்ற இயக்கங்களுக்கு எதிரான எதிர்ப்பு யுத்தமொன்று அவசியமாகின்றது. குறிப்பாக

www.tamilarangam.net

மக்களிடமுள்ள தேசிய உணர்வினை "தேசியவெறி"யாக மாற்றி, மக்களின் பிணங்களின் மேல் பாசிச சர்வாதிகாரத்தை நிறுவ முற்படுகின்ற எல். ரி. ரி. ஈ. க்கு எதிராக யுத்தமொன்று அவசியமாகிறது. இந்த எதிர்ப்புயுத்தம் என்பது தேசிய விடுதலை சம்பந்தமான சரியான திசைவழியை முன்வைக்கின்ற, குறைந்தபட்சம் அது தொடர்பான தத்துவார்த்தத் தேடல்களில் ஈடுபடுகின்றவர்களால் முன்வைக்கப் படுவது அவசியமானதாகும்.

தமிழீழப் போராட்டத்தின் ஆரம்பக் கட்டங்களில் மக்களிடம் இருந்து எழுந்த தேசிய உணர்வின் வடிகாலாக சிறிலங்கா அரசிற்கு எதிரான திசையற்ற எதிர்ப்பு யுத்தமாகவிருந்த நிலைமையானது தொடர்ந்து அப்படியே பேணப்பட்டதன் விளைவாக இன்று இப் போராட்டம் தேசவிடுதலைக்கான எதிர்ப்புப் போராட்டம் என்ற தன்மையையே இழந்து போய் இயக்கங்கள் தமது பாசிச சர்வாதிகாரத்தை நிறுவிக் கொள்கிற போராட்டமாக மாற்றப்பட்டுவிட்டது.

இன்றைய எல். ரி. ரி. ஈ. க்கும், ஏனைய இயக்கங்களுக்கும் எதிரான போராட்டமானது (அது போராட்ட வடிவங்களைப் பொறுத்து மாறுபடினும்) வெறுமனே எதிர்ப்பு போராட்டமென்ற நிலை மாறி புதிய தேசவிடுதலைக்கான கருத்துப் போராட்டங்களுக்கு ஊடாக நமது சூழலுக்கும், சமூகக் கட்டமைப்புக்கும் ஒத்த கருத்தை முன்வைக்கின்ற அடிப்படையில் அமைகின்ற தேசவிடுதலை யுத்தமாக அமையவேண்டும்.

ஆனால் எல். ரி. ரி. ஈ. யையும், ஏனைய துரோகத்தனமான இயக்கங்களையும் கண்டிக்கின்ற ஒவ்வொரு தனிமனிதர்களும், குழுக்களும் பொதுவாக கற்பனை மட்டத்தில் சரியான இயக்கம் அல்லது கருத்து இருப்பதாகக்கணித்துக்கொண்டு கருத்துத் தாக்குதல்களை நடத்திக்கொண்டிருந்தனர். இது ஒரு கற்பனை வாத கூண்டுக்குள்ளிருந்து நடத்தப்பட்ட வெற்று விமர்சனங்களாகவே முடிந்து போயின.

(போராட்டத்திற்கு மக்கள் விரும்பியோ, விரும்பாமலோ தலைமை தாங்குகின்ற) எல். ரி. ரி. ஈ. தவறிழைக்கிறது, போராட்டத்தைச் சீர்குலைக்கிறதென்று தூண்டில் கூறுமானல் போராட்டத்தை முன்னெடுக்கத் தூண்டிலிடம் உள்ள திட்டம் என்ன? அல்லது அதற்கான முயற்சி அல்லது தத்துவார்த்த தேடல் எங்கே? எல். ரி. ரி. ஈ. க்கும், ஏனைய இயக்கங்களுக்கும் எதிரான போராட்டங்கள் தேசவிடுதலை யுத்தமாகப் பரிணமிக்கத் தவறுமானல் இன்னுமொரு எல். ரி. ரி. ஈ. யின் உருவாக்கத்திற்கு வழி சமைப்பதிலேயே கொண்டுபோய்விடும்.

தூண்டிலைப் பொறுத்தவரையில் எல். ரி. ரி. ஈ., ஏனைய

www.tamilarangam.net

இயக்கங்களைக் கண்டிக்கும்போது இவ்வியக்கங்கள் அனைத்தும் அல்லது ஒவ்வொன்றும் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற சமூக சக்திகள் யார்?என்ற கருத்தையாவது குறைந்தபட்சம் இதுவரைமுன்வைக்கத் தவறிவிட்டது.

எமது தேசவிடுதலைக்கான யுத்தம் ஒன்றிற்கு தேவையிருந்த ஆரம்பக் கட்டத்திலிருந்தே இழைக்கப்பட்ட இந்தத் தவறு மீண்டும் இன்னொரு தடவை நிகழகூடாது. இவ்வாறான சரியான கருத்தை முன்வைக்கத் திராணி இல்லாத "மேதாவிகள்" ஒருபுறம் எல்.ரி.ரி.ஈ.யைத் தேசிய சக்திகள் என்றும், மறுபுறம் தமிழ்த் தேசிய இனம் பிரிந்துபோவதற்கான போராட்டம் என்பதே தவறானது எனவும்மேசையிலிருந்தபடி வர்ணிக்கின்றனர். இவர்கள் எல்.ரி.ரி.ஈ., மற்றைய இயக்கங்கள் மீதான விமர்சனம் தொடர்பாக எந்தத் தவிப்பும் இல்லாதவர்கள்.

இதுவரையிலான போராட்டம் தொடர்பான மதிப்பீடு, போராட்டம் தொடர்பான சரியான திட்டம் என்பன பருமட்டாகவாவது முன்வைக்கப்படாத வரையில் எல்.ரி.ரி.ஈ., இலங்கை, இந்திய அரசுகள், ஈ.பி.ஆர், எல், எவ். என்பன ஒரே சமூக சக்தியின் பிரதிநிதிகள் எனினும்கூட அதனை அரசியல் ரீதியாக அம்பலப்படுத்த முடியாத துர்ப்பாக்கியநிலைக்குள் தள்ளப்பட்டுவிடுவோம்.

இந்நிலையில் "தூண்டில்" செய்யவேண்டியது என்ன?குறைந்தபட்சம் ஐரோப்பிய நாடுகளில் வசிக்கும் சமூக உணர்வுள்ளவர்கள் மத்தியிலாவது சரியான சூழலுக்கேற்ற தத்துவத்தை உருவாக்க களம் அமைத்துத் தரவேண்டும். எமது சமூக அமைப்பு வெகுஜன அமைப்புகள் தொடர்பாக தேசவிடுதலை இயக்கத்தின் ஸ்தாபனப் பிரச்சினை போன்ற இன்னும் தீர்க்கப்படாமல் "கிழிக்கப்படாத கடுதாசி" என்ற நிலைமையில் இருக்கின்ற தத்துவார்த்தப் பிரச்சினைகளை எமது சமூகத்தின் உள்ளும், புறமும் ஆராய வழிசெய்யவேண்டும்.

இதுவரையில் மக்கள் மத்தியில் தம்மைத்தாமே அம்பலப்படுத்திக்கொண்ட ஈ.பி.ஆர். எல்.எவ். போன்ற இயக்கங்கள் தவிர, தேசியப் போராட்டத்தின் தலைவர்கள் என்ற போலி முகமூடியுடன் உலாவுகின்ற ஜனநாயக விரோதப் பாசிசப் போக்கினைக் குறிப்பாக ஐரோப்பியநாடுகளில் அம்பலப்படுத்துகின்ற பங்கினை "தூண்டில்" வகிக்கிறது. இந்தப் பாத்திரம் ஒரு குறித்த கட்டம் வரை முற்போக்கானது. ஆனால் இதுவே இறுதியானது அல்ல.

நாம் தேச விடுதலையை எப்படி முன்னெடுக்கப் போகின்றோம் என்பதே எம் முன்னுள்ள மிகப் பெரிய கேள்வி.

(தொடர்ச்சி 50ஆம் பக்கம்)

www.tamilarangam.net

வளைகுடாவில் யுத்தம்...
(தொடர்ச்சி)

மேற்கு நாடுகளினதும், முக்கியமாக அமெரிக்காவின் ஆயுத, படைகலன்களின் உதவியுடனும் ஆதரவுடனுமே ஈராக் தன்னுடன் போர் செய்தது என்பதையும், தற்போது வளைகுடாவுக்கு வந்திருக்கும் இதேநாடுகளால் வழங்கப்பட்ட விசவாயுவினால் தான் ஈராக்கினால் தனது மக்கள் கொல்லப்பட்டனர் என்பதையும் பற்றி அலட்டிக் கொள்ளாமல் நடுநிலை வகிப்பதாக ஈரான் கூறிக்கொள்வது அமெரிக்க, ரசிய ஏகாதிபத்தியங்களுக்கெதிராக ஈரான் உறுதியாக நின்றது என்ற கருத்தை கேள்விக்குள்ளாக்கிறது.


ஈராக்கின் ஆதரவாளர்கள்

ஜோர்டான் மன்னர் குசேனும், பலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர் அரபாத்துமே பகிரங்கமாக ஈராக்கிற்கான— தமது ஆதரவைத் தெரிவித்துள்ளதுடன் வளைகுடாவைவிட்டு அந்நியப்படைகள் வெளியேறவேண்டும் என்றும் தெரிவித்துள்ளனர்.

இதைவிட தற்போது அமெரிக்காவுக்குச் சார்பாக இருக்கும் அரபுநாடுகள் சிலவற்றின் மக்கள் ஈராக்கிற்கு ஆதரவாகவுள்ளனர்.

எண்ணெய்க்காக இரத்தம் வேண்டாம்

வளைகுடாவில் அமெரிக்காவும், ஏனைய மேற்கு நாடுகளு




வளைகுடாவில் நிற்கின்ற வெளிநாடுகளின் -

2. துருப்புகள்
3. போர்க் கப்பல்கள்
4. கவச வாகனங்கள்
5. போர் விமானங்கள்

1. ஈராக்கின் படையும், படைக்கலன்களும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்


www.tamilarangam.net

ம்தமது படைகளை நிறுத்தியதிலிருந்தே அமெரிக்காவிலும் ஏனைய மேற்கைரோப்பிய நாடுகளிலும் இதற்கெதிரான ஆர்பாட்டங்களும், ஊர்வலங்களும், சுவரொட்டிப் பிரச்சாரங்களும் ஆரம்பித்துவிட்டன.

15.01.91இலிருந்து முக்கியமாக அமெரிக்கா, ஜேர்மெனி, பிரிட்டன் ஆகிய நாடுகளில் வளைகுடாப் போருக்கெதிரான மக்களின் நடவடிக்கைகள் தொடர்ந்து ஒவ்வொரு நாளும் நடைபெற்று வருகின்றன. "போர் வேண்டாம்", "சமாதானம்" "எண்ணெய்க்காக இரத்தம் வேண்டாம்" என்ற கோசங்கள் பிரதானமாகவுள்ளன.

ஜேர்மெனியின் முக்கிய நகரங்களிலும், சிறிய நகரங்களிலும் பாதை தடுப்பு, ஆர்பாட்ட- ஊர்வலம், பாடசாலை பகிஷ்கரிப்பு... என்று ஆயிரக்கணக்- கானோர் வளைகுடா யுத்ததிற்கு தங்கள் எதிர்ப்பைத் தெரிவித்து வருகிறார்கள். இந்த எதிர்ப்புப் போராட்டத்தை ஒழுங்குபடுத்துவதிலும், பங்குபற்றுவதிலும் மாணவர்கள், தொழிற்சங்கள், பாசிச எதிர்ப்பு இயக்கங்கள் முன்நிற்கின்றன. ஏராளமான மாணவர்கள் தொடர்ச்சியாகப் பாடசாலைகளைப் பகிஷ்கரித்து இந் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

"யுத்தத்திற்கு ஜேர்மனிய ஆயுதங்கள் வேண்டாம்" "யுத்தத்திற்கு ஜேர்மெனியப் பணம் வேண்டாம்", "ஜேர்மெனியின் ஆயுதங்களும், பணமும் உலக மக்களை கொல்லுகின்றன", "துருக்கியிலிருந்து ஜேர்மெனியப் படைகளைத் திருப்பியழை", "யார் வென்றால் என்ன" (மண்டையோட்டின் படத்துடன்), "பெற்றோல் நிலையங்களில் இரத்தம்".... போன்ற சுலோகங்கள் அட்டைகளை ஊர்வலங்களில் தாங்கிச் செல்கிறார்கள். 'தைசன்', 'ஸீமன்ஸ்' போன்ற நிறுவனங்கள் யுத்தத்திற்கு தொடர்ந்தும் ஆயுத விநியோகம் செய்கின்றன", "டொச் வங்கி யுத்தத்திற்கு நிதியுதவி செய்கிறது" என்ற சுலோகங்களும் குறிப்பிடதக்கன. பல வீடுகளில் வெள்ளை கொடி தொங்கவிடப்பட்டுள்ளது. சுவர்களிலும் எதிர்ப்பு சுலோகங்கள் எழுதப்பட்டுள்ளன.





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இந்த எதிர்ப்பு நடவடிக்கைகள் மூலம் தான் அம்பலப்படுவதை அறிந்த ஜேர்மென் அரசு மக்களின் நடவடிக்கைகளை அடக்க ஆரம்பித்துள்ளது. இதன் முதற் கட்டமாக பேர்லினில் - பாதைத் தடுப்பில் ஈடுபட்டிருந்தவர்களில் நூற்றுக் கணக்கானவர்கள் பொலிசாரினால் கைது செய்யப்பட்டு சிறைகளில் அடைக்கப்பட்டுள்ளனர்.

வியட்நாம் மீது அமெரிக்கா நடத்திய ஆக்கிரமிப்பை எதிர்த்தும், வியட்நாம் மக்களுக்கு ஆதரவாகவும் அமெரிக்க மக்களினால் மேற்கொள்ளப்பட்ட அரச எதிர்ப்பு நடவடிக்கைகள் கூட அமெரிக்காவைப் பின்வாங்கவைத்ததற்கான காரணிகளில் ஒன்றாக அடங்கும் என்பது பலராலும் அறிந்த விடயம்.

இதைப் போலவே இன்று உலகின் பல பாகங்களிலும் வளைகுடா யுத்தத்திற்கு எதிராக மேற்கொள்ளப்படும் மக்கள் திரள் நடவடிக்கைகள் ஓரளவுக்கேனும் ஸ்தாபனப்படுத்தப்பட்டு வலுவாக்கப்படுவதன் மூலம் யுத்த தந்திரதாரிகளையும், யுத்தத்தினால் இலாபமடையும் சக்திகளையும் அம்பலப்படுத்துவதுடன், அதிகாரத்தை நிலைநாட்ட நடத்தப்படும் கோர யுத்தத்திற்கு பலியாகிக் கொண்டிருக்கும் அப்பாவி மக்களைக் காப்பாற்றும் நடவடிக்கைகளிலும் குறைந்தபட்சமாகவேனும் ஈடுபடமுடியும்.

✶

கார்த்திக்

---

100 நூல்கள்
(தொடர்ச்சி)

இந்த நிலையில் "தூண்டில்" ஓர் அரசியற் பத்திரிகை என்ற பரிணாமத்தைப் பெற்று ஒரு ஸ்தாபகன் என்ற நிலைக்கு மாறும் என்ற நம்பிக்கை வீண்போகாது என நம்புகின்றேன்.

மேலும் இயக்கங்கள் தமது பாசிச சர்வாதிகாரத்தை நிலைநிறுத்த முயல்வதை நியாயபடுத்தியும் அதாவது ஒருவகையில் ஜனநாயக மறுப்பின் இருப்பை நிலைநிறுத்திக்கொள்வதை நியாயப்படுத்தியும் சமூக உணர்வேயற்ற 'அரசியல் சகதி' களால் வெளியிடப்படும் மதச் சார்பான, 'அரசியல் சார்பற்ற' பத்திரிகைகளுக்கு மத்தியிலும், இயக்கங்களின் ஆதரவாளர்களின் கெடுபிடிகளுக்கு மத்தியிலும் வெளிவரும் தூண்டிலின் பங்கு ஜனநாயகப் போராட்டத்தில் மறுக்க முடியாத இடத்தில் வைக்கப்படும்.

- பிரபாகரன்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



க. கலாமோகன்

போதல்,
இது எப்போதைக்கும் எப்போதைக்குமாகவே.
ஒரு கிழட்டு மனிதன் சொன்னான்
ரகசியமாக.

போதல்,
இது திரும்பி வருவதற்காகவல்ல.
இதுவும் அதே குரல்தான்.

பையன்,
அதனைக் கேட்க விரும்பவில்லை.
அவனிற்கு,
போதல் திரும்பி வருவதற்காக.
ஆனால், அவனிற்கு முன்போன
அவனது நண்பன்
திரும்பி வரவேயில்லை.
திரும்பி வரவும் மாட்டான்.
பையனை இது தொல்லைப்படுத்தவில்லை.
துண்டாகத் தொல்லைப்படுத்தவேயில்லை.
நம்பிக்கையுடன் அவன் போகின்றான்.

மனிதனும், நம்பிக்கையும்
ஒன்றாகப் போகின்றன.
இரண்டுமே திரும்பி வரா.

அதே குரல்தான் இதையும் சொல்கிறது.
கிழட்டு மனிதனின் குரல்.
இறந்துபோன கிணற்றைப் போன்ற கிழடு.

www.tamilarangam.net

கிழட்டு மனிதனுலும், கிராமத்திலுைம்,
நாடுகளிலும்
போனவர்கள் பார்க்கப்பட்டார்கள்.
திரும்புதல்களும், நம்பிக்கைகளும்
மறதிக்குள் வீழ்ந்துகொண்டன.
ஆனல், போராட்டமோ தொடர்கின்றது.
போதல் திரும்பி வருவதற்காகவல்ல.

உழவர்களின் பாடல்கள் தொடர்கின்றன.
துக்கக் குரல்கள்,
கண்ணீர் நிறைந்த வார்த்தைகள்.
பையன்களோ போகின்றார்கள்.
போதல் திரும்பிவருவதற்காக வல்ல.

கிழட்டு மனிதன்
ரகசியமாக அழுகின்றான்.



பின் அட்டை "அறிவித்தல்" கோவிந்தன்
எழுதிய "புதியதோர்
உலகம்" என்ற நாவலிருந்து.

www.tamilarangam.net

# "புதிய பூச்சு"

இலங்கையை ஆளும் அதிகாரத்தை பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் பெரும்பான்மையினத்தைச் சேர்ந்த ஆளும் வர்க்கத்திடம் கொடுத்துவிட்டுச் சென்றதிலிருந்து இன்றுவரை இலங்கை அரசின் "அடிப்படை" மாற்றமடையவில்லை. அது தொடர்ந்தும் 'சிங்கள பௌத்த பேரினவாதமாகவே' பேணப்பட்டு வருகிறது. எனினும் "வாக்கெடுப்பு ஜனநாயகம்" மூலம் மாறி மாறி ஆட்சியைப் பிடித்துக்கொள்ளும் பேரினவாதக் கட்சிகள் தங்கள் "அடிப்படை" யை மாற்றாமல் "புதிய நடைமுறைகளை" அவ்வப்போது சாணக்கியமாக மாற்றிக்கொண்டிருக்கின்றன.

இன்றைய ஜனாதிபதி பிரேமதாசவோ இன்னும் ஒருபடி மேலே போய் பழைய அத்திவாரத்தில் புதிய கட்டிடத்தையே ஸ்தாபிப்பதற்கு முயன்று கடந்தகாலங்களிலும், தற்போதும் இதில் ஓரளவு வெற்றி பெற்றுள்ளார். இதற்கு ஓர் சிறந்த உதாரணமாக இன்று புலிகளைத் தனிமைப்படுத்தி, தமிழ் மக்கள் மீது தொடுத்து வரும் யுத்தத்திற்கு ஏனைய தமிழ் இயக்கங்கள், கட்சிகளையே தன் பக்கம் பேச வைத்துள்ளதுடன், ஈ.பி.டி.பி., புளொட், ரெலோ குழுக்களை நேரடியாக "களத்தில்" இறக்கிவிட்டிருப்பதையும் கூறலாம். இதனால் சிறுபான்மையினருக்கு எதிரான அரசின் பயங்கரவாதம், ஒரு தமிழ் பயங்கரவாத குழுவுக்கு எதிரான போராக பெயர் பெற்றிருக்கிறது.


தூண்டில்

ஜனவரி 1991

கலம் : 37

ஆசிரியர் குழு ........... கடலோடிகள்

முகவரி ........... THOONDIL<br>Südasien Büro<br>Grosse Heimstr. 58<br>4600 Dortmund 1<br>F.R.Germany

தொலைபேசி ........... (0231)136633<br>(புதன் கிழமைகளில் 14-20மணிவரை)




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பிரேமதாசவின் புதுவழிமுறைகள் சில பற்றி "புதிய கண்ணியவான்" என்ற தலைப்பில் (கலம் 30இல்) குறிப்பிட்டிருந்தோம். தொடர்ந்தும் இந்தப் பாதையிலேயே சென்றுகொண்டிருக்கும் பிரேமதாச தற்போது ஏனைய சிங்கள, தமிழ், முஸ்லீம் கட்சிகளும், இயக்கங்களும் கூட "இதே வழி"யைப் பின்பற்ற வேண்டிய மறைமுக நிர்ப்பந்தத்தை ஏற்படுத்தியுள்ளார். பிரேமதாசவின் வழிகளை நிராகரிப்பவர்கள் "ஜனநாயக நீரோட்டத்தில்" இருந்து அந்நியப்பட்டுப் போகக்கூடிய புதிய நெருக்கடி ஏற்பட்டுள்ளதுடன் பலரைப் பிரேமதாசவுக்கு விசுவாசமாக வாலையாட்டும் நாய்களின் கூட்டமாகவும் வைத்திருக்கிறது.

இவற்றின் அண்மைய உச்சக்கட்டமாக ஐ.தே.க. மகாநாட்டில் பங்குபற்றிய தமிழ், முஸ்லீம் கட்சிகள் பிரேமதாசவுக்கும், ஐ.தே.க.வுக்கும் வாழ்த்துப்பாவே பாடியுள்ளன. இதனால் இனவாதம் "குறைக்கப்படுகிறது" என்றொரு கருத்துப் பலரால் முன்வைக்கப்பட்டாலும் சிறுபான்மையினரின் உரிமைப் போராட்டத்திற்குரிய விழுமியம் அழிக்கப்பட்டு வருகிறது என்பதே கூடப்பொருந்தும்.

அரச பயங்கரவாதத்தை நடத்திக் கொண்டிருக்கும் ஓர் கொடூர இராணுவத்தின் - சிங்கள மக்களையே ஆயிரக்கணக்காகக் கொன்றொழித்த இராணுவத்தின் - தமிழர்களுக்கெதிரான யுத்தத்தில் கொல்லப்பட்ட இராணுவத்தின் - மேஜர் ஒருவனுக்கு தென்னிலங்கை இடதுசாரிக் கட்சிகள் பல வீர அஞ்சலி செலுத்தியதன் மூலம் இராணுவத்தை தேசிய வீரர்களாக அங்கீகரித்தும், பிரேமதாசவின் ஒடுக்குமுறையை நியாயப்படுத்தியுமுள்ளனர் என்றால் அது பிரேமதாசவுக்கு கிடைத்த வெற்றியேயாகும்.

ஏகாதிபத்தியங்களுக்கு இலங்கையைத் தாரைவார்த்து கொடுத்து, உலக வங்கியின் செல்லப்பிள்ளையாக இருக்கும் பிரேமதாச உலகநாடுகளின் கடனுதவியில் "வறுமை ஒழிப்பு", "யாவருக்

சஞ்சிகை வளர்ச்சிக்கான உதவிகளில் ஒன்றாக சந்தா !

| | | |
|---|---|---|
| மேற்கு ஜேர்மெனி ——— | 6 மாதங்கள்: | 20,-டி.எம் |
| | 1 வருடம்: | 38,-டி.எம் |
| ஐரோப்பிய நாடுகள் ——— | 6 மாதங்கள்: | 25,-டி.எம் |
| | 1 வருடம்: | 48,-டி.எம் |
| அமெரிக்க, ஆசிய, ஆபிரிக்க நாடுகள் ——— | 1 வருடம்: | 65,-டி.எம் |
| அவுஸ்திரேலியா ——— | 1 வருடம்: | 75,-டி.எம் |



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கும் வீடு" என்று சில எலும்புகளை வீசும் கவர்ச்சித் திட்டங்களின் மூலமும் தன்னைத் தொடர்ந்து பலப்படுத்திக்கொள்ள முடிகிறது.

இந்தப் "புதிய பூச்சுகள்" மூலம் ஏகாதிபத்திய, முதலாளித்துவ நாடுகளால் இலங்கை சூறையாடப்படுவது மறைக்கப்படுகிறது. சிங்கள மக்களை கடந்த 2 வருடங்களில் பெருந்தொகையாகவும், தற்போது தொடர்ந்தும் கொன்றொழிப்பது மறைக்கப்படுகிறது. தமிழர்களின் நியாயமான கோரிக்கைகள் மறைக்கப்படுகிறது. தமிழர்களுக்கு தமிழர்களே விரோதிகளாகவும் உலக அரங்கிலும், சிங்கள மக்களுக்கும் காட்டப்படுகிறார்கள். சிதைந்த தமிழ்–முஸ்லீம் உறவு சாதகமாக்கப்பட்டு முஸ்லீம் தலைமைகள் "கைக்குள்" போடப்படுகின்றன. மலையக மக்களுக்கு எதிரான நடவடிக்கைகள் திரைமறைவில் நடக்கின்றன.

இதுவரை பதவிகளில் இருந்த "தலைவர்களின்" பயங்கரவாதத்தின் "முரட்டு" தன்மை இன்று பிரேமதாசவால் "புனிதத் தன்மை" யாக்கப்பட்டு, அதன் மூலம் பிரேமதாசவும், அரசும் தம்மைப் பாதுகாத்துக் கொள்வதும், இலங்கையை வெளிநாட்டு முதலீட்டாளர்கள் வசூமாத்திவிடுவதும் நடைபெறுவது மட்டுமல்ல, அரசின் இராணுவப், பலரின் ஆதரவைப் பெற்று சர்வதேசத்துக்கும் நியாயப்படுத்தப்பட்டு வருகிறது.

இந் நிலையில் பிரேமதாசவின் புதிய பூச்சுகளை கவனத்திலெடுத்து, போராட்ட வடிவங்களை மாற்றியமைத்துக்கொள்ளவில்லையெனில், பிரேமதாசவின் தந்திரங்களுக்குப் பலியாகி வாலை சுருட்டிக்கொண்டு பின்னால் போவதோ அல்லது தனிமைப்படுத்தப்படுவதோ தவிர்க்க முடியாததாகக்கூடும்.

தபாற்கணக்கு இல. 30007468
Postscheckamt Dortmund
BLZ 44010046

உங்கள் நிதியை அனுப்பி வைத்ததும் கடிதம் மூலம் எமக்கு அறிவிப்பதனுல் சஞ்சிகையை அனுப்பி வைப்பதற்குரிய கால தாமதத்தைத் தவிர்த்துக்கொள்ளலாம்.

நன்றி.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அறிவித்தல்

நாம் சிங்கள முதலாளித்துவ அரசின் அராஜகங்களுக்கு எதிராக மாத்திரம் போராட்டங்களை முன்னெடுத்தால் போதாது. தமிழீழ விடுதலை அமைப்பிலும் உள்நுழைந்துவரும் அராஜகப் போக்குகளுக்கு எதிராகவும் போராட வேண்டும். அராஜகமும், ஒடுக்குமுறையும் எந்த ரூபத்தில் வந்தாலும் அதற்கு எதிராகப் போராட வேண்டும். தன்னளவில் இந்தக் கயமைகளை வைத்துள்ள எந்த அமைப்பாலும் தமிழீழ மக்களுக்கு விமோசனத்தை வழங்க முடியாது. ஒடுக்குமுறை தமிழ் மக்களில் சிங்கள இராணுவத்தின் அராஜகத்தினூடாகத்தான் வர வேண்டும் என்றில்லை. தமிழ் இராணுவத்தின் அராஜகப் போக்கினூடாகவும் முகங்கொடுக்க வேண்டி வரும். இதை இப்போதிருந்தே நாம் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்காவிட்டால் தமிழீழம் ஒரு அராஜக ஆட்சியாக அமைந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.